மதிப்பிடுவதாகும்.

**நோக்கங்கள் (Objectives)**

1. ஒரு கம்பெனி தனது நிறுவனத்தை விரிவாக்கம் செய்யவும், வளர்ச்சி அடையச் செய்யவும், அபிவிருத்தி செய்யவும் சமூக தணிக்கை மேற்கொள்கின்றது.
2. நிதி நிலையாக இருக்கவும்
3. பங்குதாரர்களுக்கு நிலையான மற்றும் நியாயமான பங்காதாயம் வழங்கவும்.
4. நுகர்வோருக்கு நியாயமான விலையில் பொருட்களையும், சேவையையும் அளிக்க வேண்டும்.
5. தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி, போனஸ், பணிபுரியும் இடம் நல்ல நிலையில் அமையவும், நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்குக் கொள்ளவும்.
6. தொழில் நிறுவனம் இயங்கும் இடத்தை சுற்றியுள்ள மக்களுக்கு சமுதாய பயன்களை அளிப்பது.
7. கல்வி, ஆராய்ச்சி, வளர்ச்சி, தொழில்நுட்பம் போன்ற துறைகளில் நிறுவனம் ஈடுபட இவையாவும் சமூகுத் தணிக்கையியலின் நோக்கமாகும்.

சமூக நலனில் சமூகத் தணிக்கை விரிவானயவை மேற்கொள்கின்றன. அவை

**1. உற்பத்தி தரத்தை அதிகரித்தல்.**

தட்டுப்பாடான பொருட்கள் மற்றும் சேவையை நல்ல தரத்துடன் விநியோகம் செய்வது, நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது.

**2. நேர்மையான வணிக நடைமுறை**

நேர்மையான வணிக நடைமுறையை கடைபிடிக்க வேண்டும். அதுவே எல்லா தரப்பினருக்கும் நியாயமாக விளங்கும்.

**3. கச்சாப்பொருள் மற்றும் மின்சக்தி பாதுகாத்தல்**

தட்டுப்பாடான கச்சாப்பொருள், மின்சக்தியை சிக்கனமாகவும், அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்பட வேண்டும்.

**4. தொழிலாளர் நல திட்டம்**

தொழிலாளர் நலத்திட்டமாய சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும. கல்வி, பயிற்சி, போனஸ், வீட்டுவசதி, மற்றும் பிற வழிகளை தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

**5. தொழில் கொள்கை**

தொழில் கொள்கை என்பது நிலை நிர்ணயம், கூலி, போனஸ் போன்றவைகளை தொழிலாளர்களுக்கு வழங்குவது, இலாபத்தை பங்குதாரர்களுக்கு பங்காதாயமாக வழங்குவது, நிறுவனத்தின் தொழில் கொள்கையானது சமூக பயனை நிறைவேற்றுகின்றதா என ஆராய வேண்டும்.

**6. நிர்வாகத்தில் தொழிலாளர்களை பங்குக் கொள்ளச் செய்தல்**

முதலாளி தொழிலாளி உறவு நல்ல நிலையில் உள்ளதா என ஆராய வேண்டும். நிர்வாகத்தில் தொழிலாளர்களும் பங்குக் கொள்ள அனுமதிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் தொழிலாளர்களும் முழு ஈடுபாடுடன் பணிபுரிந்து நிறுவன நலனில் அக்கறைக் கொள்வர்.

7. மாசு கட்டுப்பாடு (Polution control)

சமூகத் தணிக்கையியலின் கடமையானது நிறுவனங்களை தம்மை சுற்றியுள்ள சூழல்களை பாதுகாக்கின்றதா, காற்று, நீர், மண் போன்றவைகளை மாசுபடிவதை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என ஆராய வேண்டும்.

ஒரு நிறுவனத்தின் உண்மையான சொத்தே மனித வளங்களாகும்.

**சமூகத் தணிக்கையியலின் அவசியம்(Need for Social Audit)**

ஒரு கம்பெனியின் ஆண்டு நிதித்தணிக்கையானது அந்த கம்பெனி ஈட்டிய இலாபம், நிதிநிலைமையை காட்டுகின்றது. ஆனால் சமூகத்தணிக்கையானது ஒரு கம்பெனியானது எந்த அளவுக்கு சமூக பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளது என்பதை காட்டுகின்றது. ஆகவே சமூக பொறுப்புக்களின் செயல்பாட்டை அறிய சமூகத் தணிக்கையியல் அவசியம். சமூகத் தணிக்கையியல் சமூகத் தகவல்களை எண்ணிக்கையிலும், பண்புகளிலும்(Quantitative and Qualitative)காட்டுகின்றது. அரசாங்கமானது தொழிற்சாலை, வணிகம் வளர்ச்சிப் பெற பல்வேறு வாய்ப்புக்களையும், வசதிகளையும் அளித்து வருகிறது. ஆனால் அவைகளை சரியாக பயன்படுத்தாமல் சமூகத்திற்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. ஆகவே சமூகத்தணிக்கை அவசியமாக விளங்குகிறது.

**சமூகத் தணிக்கையியலின் சிறப்பியல்புகள்(Features of Social Audit)**

1. கம்பெனியானது சமூகத் தேவைகளை நிறைவேற்ற பொருளாக வழங்குதல் அதனை பணத்தின் மதிப்பில் அளவிட முடிகிறது. ஆனால் நுகர்வோர் மற்றும் தொழிலாளர்களை மனதளவில் திருப்திபடுத்துவது, மனநிறைவு அடைவதை எளிதில் அளவிடமுடியாது. இத்தகைய சூழலில் சமூகத் தணிக்கை எளிதில் அளவிடுகின்றது.
2. பல்வேறு சமூக பொறுப்புக்கள் யாவும் நிறுவனத்தின் வெளியே ஏற்படுகின்றன. அப்பொழுது அதன் செயல்பாட்டை அளவிடுவது மிகவும் கடினம்.
3. தேவையான தகவல்கள் எண்ணிக்கையாலும், பண்புகளிலும் சமூகத்தணிக்கையியலுக்கு வழங்க வேண்டும்.
4. சமூகத் தணிக்கை பணியை செய்ய பட்டய கணக்கு தகுதி தேவையில்லை. பொறுப்பான அதிகாரி எவரும் சமூகத் தணிக்கை பணியை மேற்கொள்ளலாம். சமூகத் தணிக்கை மேற்கொள்வது கட்டாயமல்ல.

**சமூகத் தணிக்கையின் பங்களிப்பு (Contribution of Social Audit)**

சமூகத் தணிக்கை பங்களிப்பை பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டும். ஒரு கம்பெனி சமூகத்திற்கு ஆற்றும் பணிகள் சேவைகளை பொதுமக்களுக்கு தெரிவிக்க சமூகத் தணிக்கை பயன்படுத்தப்படுகிறது.

**சமூகத் தணிக்கையின் வகைகள் (Classification of Social Audit)**

| | | | |
|---|---|---|---|
| 1. | அமைப்பு முறை | 2. | தணிப்பட்ட தணிக்கை |
| 3. | சந்தையியல் தணிக்கை | 4. | தகவல் தொடர்பு தணிக்கை |
| 5. | பங்குதாரர்கள் தணிக்கை | 6. | தீர்வு தணிக்கை |

**வெளியிட வேண்டிய தகவல்கள் (Information to be disclosed)**

சமூகத் தணிக்கையானது கீழ்க்கண்ட தகவல்களை வெளியிட வேண்டும்.

1. சமுதாயத்திற்கு உதவும் நடவடிக்கையாகிய உணவு அளிப்பு, சமூக நலத்திட்டம், சுகாதாரம் போன்ற நலத்திட்டங்களை அளிப்பது.
2. மனித வளங்களை முன்னேற்றத்திற்கான செயல்களாகிய பணி அபிவிருத்தி, பதவி மேம்பாடு, பயிற்சி, போனஸ் ஊதிய உயர்வு போன்ற செயல்பாடுகளை தெரிவிப்பது.

3. சுற்றுப்புற சூழல் நடவடிக்கை, சட்டநடவடிக்கை, வெளிப்படுத்துதல்.

4 நுகர்வோருக்கு அளிக்கக் கூடிய சேவை, பொருள் பற்றிய விவரங்கள் இத்தகைய தகவல்களை சமூகத் தணிக்கை அளிப்பதன் மூலம் கீழ்க்கண்ட நபர்கள் பயன் பெறுகிறார்கள்.

1. நிறுவனங்கள்
2. பங்குதாரர்கள்
3. கல்வி நிறுவனங்கள்
4. அரசாங்கம்
5. சூழல் ஆய்வாளர்கள்

சமூகத் தணிக்கையின் அணுகுமுறைகள் (Approaches to Social Audit)

**1. சரக்கு - அணுகுமுறை**

இதன் நோக்கமானது சமூகத்திற்கு அளித்த சரக்குகளை கணக்கு எடுப்பதாகும்.

**2. அடக்கவிலை அணுகுமுறை**

சமூக செயல்பாட்டு திட்டத்திற்கு ஏற்பட்ட செலவை கண்டுபிடிப்பது.

**3. மேலாண்மை அணுகுமுறை**

மேலாண்மையினர் எந்த அளவுக்கு சமூக திட்டங்களை நிறைவேற்றியுள்ளனர் என ஆய்வு செய்வது.

**4. அடக்கவிலை - பயன் - அணுகுமுறை**

கம்பெனி சமூகத்திற்கு ஆற்றிய சேவைக்காக ஏற்பட்ட செலவும் அதனால் உருவாகிய பயன்களின் தொடர்பை ஆய்வு செய்யவும் அணுகுமுறையாகும்.

**சமூக அடக்கவிலை பயன்பகுப்பாய்வு (Social Cost Benefit analysis)**

சமூக அடக்கவிலை பயன் பகுப்பாய்வு என்பது ஒரு கம்பெனியானது தாம் விரும்பிய சமூக பயன் சமுதாயத்திற்கு கிடைப்பதற்காக ஒரு முறையான செலவு திட்டம் தயாரித்து அந்த சமூக நலத்திட்டம் எந்த அளவுக்கு சமுதாயத்திற்கு பயன்பட்டுள்ளது. என பகுப்பாய்வு செய்வதாகும்.

**செயல்முறைகள் (Procedures)**

**1. பிரச்சனை நிர்ணயித்தல் (Determination of Problem)**

பிரச்சனை கண்டுபிடிப்பது அதனை நிர்ணயிப்பது சமூக அடக்கவிலை பயன் பகுப்பாய்வின் முதல் படி நிலையாகும்.

**2. பிரச்சனைக்கு மாற்று ஏற்பாடு தீர்வுகளை ஆராய்தல் (Ascertaining alternative solution to Problem)**

ஒரு பிரச்சனைக்கு பல்வேறு தீர்வுகளை ஏற்படுத்துவது இரண்டாவது நிலையாகும்.

**3. சமூக அடக்கவிலை மற்றும் பயன்களை மதிப்பிடுதல் (Estimation of Social costs and benefits)**

தீர்வுக்கான மாற்று ஏற்பாடுகளின் செலவு மதிப்பிடுவது மூன்றாவது நிலையாகும்.

**4. சமூக அடக்கவிலை மற்றும் பயன் மதிப்பை கண்டுபிடித்தல் (Appraisal of estimated Social cost and Benefits)**

பல்வேறு தீர்வுகளின் மதிப்பை ஒப்பிட்டு பரிந்து பொருத்தமான தீர்வை ஏற்படுத்துவது நான்காம் நிலையாகும்.

5. **சரியான தீர்வை தேர்ந்தெடுத்தல் (Evaluation of the Solution after performance)**

தீர்வின் செயல்பாட்டை அறிந்து அதன் குறைகளை கண்டுபிடித்து பின்னர் தீர்வை அமுல்படுத்துவது ஐந்தாவது நிலையாகும்.

**சமூக அடக்கவிலை பயன்பகுப்பாய்வின் நோக்கங்கள் (Objectives of Social Cost Benefit Analysis)**

1. சமூக திட்டத்தினால் எதிர்பாக்கப்படும் எதிர்கால பொருளாதார பயன் மற்றும் சமூக பயன்களை தீர்மானித்தல்.
2. சமூக மற்றும் பொருளாதார பயன்கள் பெற ஏற்படும் செலவுகளை கண்டுபிடித்தல்.
3. சமூக செயல்திட்ட நிறைவேற்றத்தில் கிடைக்கும் சமூக பயன்களை அளவிடுதல்.
4. பல்வேறு முன்மொழிவு திட்டங்களின் பயன்களை அளவிடுவது.
5. எந்த திட்டம் அதிகளவு பயன்களை தருகின்றது என்பதை கண்டுபிடிக்க வேண்டும்.

**சமூக அடக்கவிலை பயன் பகுப்பாய்வில் காணப்படும் பிரச்சனைகள் (Difficulties in Social Cost Benefit Analysis)**

1. சமூக பயன்களை அளவிடுவது கடினம்

   ஒரு கம்பெனி சமுதாயத்திற்கு ஆற்றும் சேவைகளை பணத்தால் மதிப்பிட முடியாது. ஏனெனில் சமுதாயப் பணி என்பது திருப்தி, மனநிறைவு போன்ற பண்புகளை பணத்தால் மதிப்பிட முடியாது.
2. சமூக திட்டத்திற்கு செலவிடப்படும் செலவுகளை நிறுவனத்தின் மொத்த அடக்கவிலையில் சேர்ப்பது மிகவும் சிரமம்.
3. சமுதாய திட்டத்திற்கு ஏற்படும் செலவுகளை எளிதில் மதிப்பிட முடியாது.
4. இறுதியாக சமுதாய பயன்களை எளிதில் அளவிடமுடியாது.

**சமூக தணிக்கையியலின் பயன்கள்(Benefits of Social Audit)**

சமூகத் தணிக்கையானது கம்பெனி, மேலாண்மை, பங்குதாரர்கள், அரசாங்கம், பொதுமக்களுக்கு ஆகியோருக்கு பல்வேறு பயன்களை அளிக்கின்றது.

**சமூகத் தணிக்கையால் கிடைக்கும் நன்மைகள் பின்வருமாறு**

1. ஒரு கம்பெனி தன்னுடைய சமூக நோக்கங்களை சரிவர நிறைவேற்றியுள்ளதா என மேலாண்மையினர் சோதித்து பார்க்க சமூகத் தணிக்கையியல் உதவுகின்றது.
2. சமூக நலத்திட்டத்திற்கு கம்பெனி செய்யும் செலவுகள் உண்மையிலேயே அது பயனுள்ளதாக அமைகிறதா இல்லையா என அறிய சமூக தணிக்கை உதவுகின்றது.
3. கம்பெனியின் வெளிநபர்கள் சமூகத்தணிக்கையை பாராட்சமின்றி மேற்கொள்வதால் பணியாளர்களுக்கு நல்ல எண்ணம் ஏற்படுகின்றது.
4. சமூகத் தணிக்கை கட்டாயமாக்கப்படவில்லை. இதன் அறிக்கை கம்பெனிக்கு சமர்ப்பிக்க வேண்டும். கம்பெனியின் பலம், பலவீனம் அதன் செயல்பாட்டை ஒளிவு மறைவுமின்றி தெரியப்படுத்துகின்றது.
5. சமூகத் தணிக்கை மூலம் கம்பெனிக்கு சமுதாய நலனில் அக்கறை கொள்கிறது. இதனால் மக்களின் மனதில் அந்த கம்பெனி மீது நல்ல அபிப்பிராயம் ஏற்படுகிறது.
6. பல்வேறு நலத்திட்டங்களை ஒப்பீட்டு பார்க்க உதவுகின்றது.

## வினாக்கள்

1. சமூகத் தணிக்கையியல் வரைவிலக்கணம் தருக.
2. சமூகத் தணிக்கையின் நோக்க எல்லை, நோக்கங்களை கூறுக.
3. சமூகத் தணிக்கையின் பயன்களை விவரி?
4. சமூகத் தணிக்கை வெளியிடப்படும் தகவல்களை கூறுக.
5. சமூகத் தணிக்கை நடத்த அணுகும் முறையை விவரி?
6. சமூகத் அடக்கவிலை பயன் பகுப்பாய்வின் முக்கியத்துவம் யாது?
7. சமூகத் அடக்கவிலை பயன் பகுப்பாய்வில் காணப்படும் பிரச்சனைகள் கூறுக.
8. ஒரு கம்பெனிக்கு சமூகத் தணிக்கை எவ்வாறு உதவுகின்றது என்பதை விளக்குக.

❖❖❖

# பாடம் – 6

## இந்தியாவில் சமூகத் தணிக்கை

## (Social Audit in India)

இந்தியாவை பொறுத்தவரை சமூகத் தணிக்கை ஆரம்பக் கட்டத்தில்தான் உள்ளது. இந்திய கம்பெனிகளுக்கு 1960 ஆம் ஆண்டுக்கு பின்னர் தான் சமுதாய பொறுப்பை பற்றிய எண்ணங்கள் தோன்றியுள்ளன. புதுதில்லியில் நடைபெற்ற சமுதாய பொறுப்பு என்ற கருத்தரங்கில் நுகர்வோர் பணியாளர்கள், பங்குதாரர்கள் சமுதாயத்திற்கு நிறுவனங்களின் பொறுப்பை வலியுறுத்தியுள்ளன.

### சாகர்குழு (Sacher Committee)

1978 ஆம் வருடம் மத்திய அரசு ஒரு சிறந்த வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்றை நியமித்துள்ளது. அதன் தலைவராக திரு. சாகர் இருந்து வந்தார். அந்த குழுவே சாகர் குழு எனப்படும்.

சமுதாய பொறுப்பை நிறுவனங்கள் எளிதில் தட்டி களிக்க முடியாது என கூறுகிறது.

### பொதுத்துறை நிறுவனங்களும் சமூகத் தணிக்கையும் (Public Enterprises and Social Auditing)

டாக்டர் மன்மோகன் சிங் சென்னையில் பேசும் பொழுது பொதுத்துறையின் எந்த பிரிவில் சமூகத் தணிக்கை அவசியம், எதில் அதிக கவ்னம் செலுத்த வேண்டும் என கூறியுள்ளார். ஆகவே பொதுத்துறை நிறுவனங்கள் சமுதாய பொறுப்பை நிறைவேற்றுவது அதன் கடமையாகும் இந்த நோக்கத்திற்காகவே பொதுத்துறை நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன.

### தனியார் துறையும் சமூக பொறுப்பும் (Private enterprise and Social Responsibility)

புதிய பொருளாதார கொள்கை, தாராளமயமாக்குதல், முதலீடு பரவலாக்குதல் போன்ற அரசு கொள்கையினால் தனியார்துறை தகவல் தொடர்பு, காப்பீடு, வங்கி போன்ற தொழில்களின் அபரிதமான வளர்ச்சியடைந்து வருகிறது. ஆனால் அதற்கு இணையாக போட்டியும் கடுமையாக உள்ளன. பொருளாதார சீர்திருத்தத்திற்காக அரசாங்கம் தனியார் துறை மீது சிறப்பு கட்டுப்பாடு செலுத்தி வருகிறது. தனியார் துறையும் சமுதாயப் பொறுப்போடு செயல்பட்டு வந்தால்தான் அந்த துறையும் தொடர்ந்து செயல்படமுடியும்.

### சமூகத் தணிக்கையும் சமூகக் கணக்கியலும் (Social Audit and Social Accounting)

சமூக கணக்கியல் என்பது ஒரு நிறுவனத்தின் சமுதாய செயல்பாட்டு மாற்றத்தை முறையாக அளவிடும் ஒரு செயல் முறையாகும். நிறுவனத்தின் உள்ளேயும் நிறுவனத்திற்கு வெளியே உள்ள சமுதாய தகவல்களை சேகரித்து சமுதாயம் திரம்பட செயல்படவும் நிறுவனத்தின் சமுதாய செயல்திறனை அளவிடும் ஒரு கணக்கியலாகும்.

சமூகத் தணிக்கை என்பது சமுதாய பொறுப்பின் எல்லையில் ஒரு நிறுவனம் எந்த அளவுக்கு அதன் செயல் திறனானது திட்டமிட்ட இலக்கை அடைந்துள்து என மதிப்பிடும் ஒரு முறையாகும்.

### சமூகத் தணிக்கையும் டிஸ்கோ நிறுவனமும் (Social Audit and TISCO)

இந்தியாவில் முதல் முதலில் டாட்டா அயான் & ஸ்டீல் கம்பெனிதான் (Tata Iron & Steel Company (TISCO)) சமூகத் தணிக்கை மேற்க் கொண்டுள்ளது. 1979 அக்டோபரில் ஒரு குழுவை நியமித்து (TISCO) கம்பெனியின் சமுதாய செயல்பாட்டை அறிய சமூகத் தணிக்கையை நடத்தியது. 1980ல் அந்த கமிட்டி அறிக்கை பல்வேறு தலைப்புகளில் சமர்பித்துள்ளது. முதலாளி தொழிலாளி உறவு, தொழிலாளர்களுக்கு வழங்கும் வீடு, சுகாதாரம், தண்ணீர், மருத்துவ வசதி, மாசு கட்டுப்பாடு, நுகர்வோர் - பங்குதாரர்கள், சமுதாய நலத்திட்டம், கிராமப்புற மேம்பாடு, தட்டம்மை ஒழித்தல் பஞ்ச நிவாரணம் போன்ற தலைப்புகளில் TISCO வின் பங்கை பற்றிய ஆய்வு மேற்க்கொள்ளப்பட்டது.

இத்தகைய அறிக்கை மூலம் சமூகத்தணிக்கையின் வரம்பு எல்லை பரவ ஆரம்பித்துள்ளது.

### இந்தியாவில் சமூகத் தணிக்கையின் முக்கியத்துவம் (Significance of Social Audit in India)

இந்தியாவில் தனியார்துறை தேசீயமயமாக்கப்பட்ட பிறகு சமூகத் தணிக்கை பணி மிகவும் தேவைப்படுகிறது. பெரும்பாலான மக்கள் படிப்பு அறிவு இல்லாதவர்களாக உள்ளனர். அவர்களிடம் விழிப்புணர்வு இல்லை. மேலும் புதிய பொருளாதார கொள்கை மூலம் தடையில்லா வணிகம், தனியார்துறை ஆக்கிரமிப்பு மூலம் பொதுத்துறையினரின் நட்டம் போன்ற சூழ்நிலைகளில் சமூகத் தணிக்கை இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானதாக விளங்குகிறது.

### சமூகத்தணிக்கை கட்டாயமாக்கல் (Legal Sanction to Social Audit)

இந்தியாவில் சமூகத் தணிக்கை சட்ட அங்கீகாரம் வழங்குவதன் மூலம் சில கம்பெனிகள் கட்டாயமாக சமூகத் தணிக்கை மேற்கொள்ளவேண்டும். கம்பெனி சட்டம் திருத்தத்தில் சமூகத்தணிக்கை கம்பெனிக்கு கொண்டு வரப்பட்டன.

### சிறப்பியில்புகள்

1. குறிப்பிட்ட கம்பெனிகள் மட்டும் சமூகத்தணிக்கையை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
2. சமூகத்தணிக்கை குறிப்பாக செலவினங்களை மட்டுமே தணிக்கை செய்யப்படுகிறது. ஏனெனில் சமுதாய வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் எவ்வளவு தொகை செலவிடப்படுகிறது என தெரிந்துக் கொள்ளவே செலவினங்கள் மட்டும் தணிக்கை செய்யப்படுகின்றன.
3. இது தார்மீக பயத்தை ஏற்படுத்தவே கொண்டு வரப்படுகிறது. யாரையும் தண்டிப்பதில்லை.

### சமூகத்தணிக்கையின்குழு (Council for Social Audit)

1988 ஆம் வரும் ஜூலை 7 - ம் தேதி நீதிபதி P.V பகவதி (முன்னாள் உச்சி நீதிமன்ற நீதிபதி) தலைமையில் சமூக தணிக்கை, குழு ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதில் 15 உறுப்பினர்கள் உள்ளனர். திரு. அனில் அகர்பால், திரு மணிபாய் தேசாய், திரு இந்திரஜித் தேவ், திரு. இந்திர ஜெய்சிங், திரு நிர்மல் பான்டோ ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்தக் குழுவின் நோக்கமானது பொதுமக்களின் பங்குறவு தண்ணீர் வசதி, விலை

கட்டுப்பாடு, நலத்திட்டங்கள், விழிப்புணர்வு, தகவல்தொடர்பு, கல்லாமையை ஒழித்தல், தட்டம்மை, போலியோ போன்ற நோய்களை அடியோடு ஒழித்தல் ஆகியவையாகும்.

**முடிவுரை**

சமூகத்தணிக்கை இந்தியாவில் பிறந்த பருவத்திலேயே உள்ளது. இதில் பல நன்மைகள் கிடைத்தாலும் செலவுகள் அதிகமாக உள்ளன. ஒரு சில கம்பெனிகள் குறிப்பாக TISCO, சிமெண்ட் ஆலைகள் மட்டுமே சமூகத் தணிக்கையை நடத்தி வருகின்றன.

## வினாக்கள்

1. சமூகத்தணிக்கை என்றால் என்ன? அதன் நோக்க எல்லையை கூறுக.
2. இந்தியாவில் சமூகத் தணிக்கையின் நிலையை விவரி?
3. வளரும் பொருளாதாரத்திற்கு சமூகத் தணிக்கையின் முக்கியத்துவத்தை கூறுக.
4. சமூகத்தணிக்கையின் சிறப்பியல்புகளை கூறுக.
5. இந்தியாவில் உள்ள தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு சமூகத்தணிக்கையின் முக்கியத்துவத்தை விவரிக்க.

❖❖❖

# பாடம் –7

## தொழிலும் அரசாங்கமும்

**(Business and Government)**

ஒரு தொழில் நிறுவனத்தின் அகம் மற்றும் புற சூழல்கள் அந்த தொழிலின் நிறுவனத்தை பாதிக்கின்றன. தொழில் சூழலுக்கு அரசின் தலையீடு அவசியம். அதற்காக அரசு சில ஒழுங்கு விதிமுறைகள் உள்ளன.

### அரசின் தலையீடு அவசியம் (Reasons for Government's Intervention)

**1. சந்தையிடுகை அல்லாத பொருளுக்கும் பகுப்படுத்த இயலாத சேவைக்கும் உள்ள வசதிகள் (Provisions of Nonmarket Products and Indivisible Services)**

சில பொருட்களுக்கும் சேவைக்கும் அரசின் தலையீடு அவசியமாக உள்ளது. விலைவாசி பாதுகாப்பு, வெள்ளக் கட்டுப்பாடு, பொதுச் சொத்துக்கள், அத்தியாவசிய சேவைகளை வழங்குவது அரசின் கடமையாகும்.

ரெட் கிராஸ், சில சமூக சேவை நிறுவனங்கள், நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் போன்ற தொண்டு நிறுவனங்கள் நிறுவன உற்பத்தி பொருளுக்கும் சேவைக்கும் பல உதவி செய்து வருகின்றன. இந்த தொண்டு நிறுவனங்களின் செயல்பாட்டுக்கு அரசு பல உதவிகள் செய்து வருகின்றன.

**2. அடிப்படை வசதிகள் (Provision of Basic Infrastructure)**

மின்சாரம், போக்குவரத்து, தகவல் தொடர்பு, துறைமுக வசதி, வங்கி, காப்பீடு நிறுவனங்கள் போன்ற அடிப்படை நிறுவனங்களை ஏற்படுத்துவது அரசின் கடமையாகும். தொழில் நிறுவனங்கள் செழுமையாக நடைபெற இத்தகைய அடிப்படை வசதிகள் தேவை. இதன்மூலம் நாட்டின் பொருளாதாரம் வளம் அதிகரிக்கின்றது.

**3. சந்தை நடவடிக்கைகளை விரிவுப்படுத்துவது (Improvement in market functioning)**

சந்தையில் காணப்படும் சமமற்ற சூழல் அரசுகளை பல நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**அ. சரியான சந்தையிடுகை தகவல்களை அளிப்பது (Provision of Correct In formation)**

தகவல்களை நேரடியாக வாடிக்கையாளர், உரிமையாளர், பொருள் அளிப்பவரிடம் பெறலாம். கச்சாப் பொருளின் விலை, தரம், உற்பத்திவிலை, போன்ற தகவல்களை சரியான முறையில் பெறலாம். சந்தையிடுகை ஆய்வு மூலம் தகவல்களை பெற முடியும். ஆனால் வளர்ச்சியடையாத சந்தையில் தனியார் துறை நடத்தும் ஆய்வு மூலம் முழுமையாக தகவல்கள் பெற முடியாது. அத்தகைய சூழலின் அரசின் உதவி தேவைப்படுகின்றது.

**ஆ. போட்டி சூழல் (Promotion of Competition)**

போட்டி இல்லாத சூழலில் வர்த்தகர்கள் எளிதில் சமுதாயத்தை ஏமாற்றுகின்றனர். கார்டல், ஒருங்கிணைப்பு, சிண்டிகேட், போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி போட்டியை தவிர்க்கின்றனர். இதனை தடுக்க அரசின் தலையீடு அவசியமாகிறது. போட்டியிருந்தால் தான் முற்றுரிமை, நேர்மையற்ற வணிக நடைமுறையை தடுக்க முடியும். இதனை தடுக்க

1. அரசு தனியார் துறையின் அளவை கட்டுப்படுத்தலாம்
2. நேர்மையற்ற வணிக நடைமுறைகளை ஒழுங்குப்படுத்தவும், அதனை நெறிப்படுத்தவும் நடவடிக்கை எடுப்பது.
3. போட்டி நிறுவனங்கள் ஒன்றோடு ஒன்றோடு இணையும் நிகழ்ச்சியை தடுப்பது இத்தகைய சூழல் மூலம் உள்நாட்டு நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங்களோடு போட்டியிடமுடியும்.

**இ. வளங்களை சரிவர பயன்படுத்த ஒதுக்கீடு செய்தல் (Allocation of Resources among Better alternative uses)**

பொதுவாக முதலீட்டாளர்கள் நல்ல வருவாய் தரும் முதலீடு. மூலங்களின் முதலீடு செய்யவே விரும்புகின்றனர். ஆனால் முதலீட்டாளர்கள் சமூகத்திற்கு பயன்தரும் திட்டங்களில் பணம் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள். ஏனெனில் அதில் குறைந்த வருவாய் உள்ளது. இத்தகைய சூழலில் அரசின் தலையீடு அவசியம். அரசாங்கம் அத்தகைய வளங்களை பெற மக்களுக்கு ஊக்கத்தொகை, ஊக்கவாய்ப்பு வழங்க வேண்டும்.

**ஈ. நிதிநிறுவனங்களின் உதவி (Provision of Institutional Support)**

அரசாங்கமானது சில துறைகளுக்கு நிதி உதவி அளிப்பதன் மூலம் அந்த துறை சிறந்த வளர்ச்சி அடைகிறது. எ.கா. சிறு தொழில்கள் விவசாயம்.

இத்தகைய துறைகளுக்கு நிதி உதவி அளிப்பதன் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்றது.

**2. நிறுவன நடைமுறையை நெறிபடுத்துவது (Standardisation of Business Practices)**

அரசாங்கமே சில வணிக நடைமுறைகளை கொண்டு வந்து அதனை வணிக நிறுவனங்கள் செயல்படுத்த சில கோட்பாடுகளையும், ஒழுக்க நெறிகளையும் கொண்டு வரவேண்டும்.

**ஊ. தேவையை நிலைப்படுத்துதல் (Stabilisation of Aggregate Demand)**

அரசாங்கமானது பணக்கொள்கை, வரிக்கொள்கையை அமுல்படுத்துவதன் மூலம் பண அளிப்பு மற்றும் தேவையின் சுழற்சியை கட்டுப்படுத்த வசதி உள்ளது.

4. **சந்தையில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்தல்**
**(Correction of inherent defects in the market machinism)**

அரசின் தலையீடு சந்தையில் இருந்தால் தான் சந்தையில் காணப்படும். குறைகளை போக்க முடியும். கீழ்க்கண்டவைகளில் அரசின் குறுக்கீடு அவசியமாக விளங்குகிறது.

அ. நுகர்வோண் அறியாமை (Ignorance of the Consumer)

நடைமுறையில் சந்தையில் நுகர்வோர் குறைந்த செலவில் மனநிறைவு அடைவதில்லை. போதுமான தகவல்கள் நுகர்வோருக்கு செல்லாமல் இருப்பதால் நுகர்வோருக்கு பொருளை பற்றிய விழிப்புணர்வு இல்லை. இத்தகைய சூழலில் அரசின் தலையீடு அவசியமாக விளங்குகிறது.

ஆ. **முற்றுரிமை வசதி (Nature of monopolies)**

பெரிய தொழிற்சாலை உருவாகுவதால் பேரளவு உற்பத்தி, முற்றுரிமை வசதி உண்டாகுகின்றது. பின்னர் போட்டி சூழல் ஏற்படுகின்றது. அதற்காக தொழில் நிறுவனங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்த முற்றுரிமை பெறுகின்றனர். இதனால் பெருமளவுக்கு சமுதாயத்தை சுரண்டுகிறார்கள். சமுதாயத்தை ஏமாற்றுவதன் மூலம் முற்றுரிமை ஆல்போல் வளரத் துவங்குகிறது.

இத்தகைய முற்றுரிமையை தடுக்க அரசு குறுக்கீடு அவசியம்.

இ. **சரியான தகவல் இன்மை (Absence of Relevant Information)**

போதுமான சந்தையை பற்றிய தகவல் உற்பத்தி நிறுவனங்களுக்கு கிடைக்காததால் அவர்கள் பொருளின் அடக்கவிலையை சரியாக தீர்மானிக்க முடியவில்லை. இதனை நிவர்த்தி செய்ய அரசாங்கம் சந்தை பற்றிய தகவல்களை சேகரித்து உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும்.

ஈ. அவசர காலங்களில் தேவையான வளங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் (Allocation of Resources in Times of Emergsencies)

கச்சாப்பொருள், அந்நிய செலவாணி போன்றவைகள் போர்காலங்களில் தட்டுப்பாடு ஏற்படும். அத்தகைய சூழலில் அரசு தற்காலிக நடவடிக்கைகளை மேற்கொண்டு விலையை கட்டுப்படுத்த வேண்டும்.

உ. **ஊக வாணிபம் (Speculation)**

பொருளாதார நடவடிக்கையால் சந்தையில் அதிகளவில் ஊன வாணிப நடவடிக்கை நடைபெறுகின்றன. ஊக வாணிபம் ஒரு குறிப்பிட்ட வரையறைக்கு மேல் செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அரசாங்கம் ஊன வாணிபத்தை நெறிபடுத்தவும், கட்டுப்படுத்த சில விதிகள் நடைமுறை கொண்டு வர வேண்டும்.

ஊ. **பணம் மற்றும் செல்வம் சமமின்மை (Inequalities in the Distribution of Income and Wealth)**

தனிநபரின் பணம், செல்வம் யாவும் அவரிடம் உள்ள உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கையை பொறுத்தே உள்ளது. நிறுவனங்கள் யாவும் திறமை, மற்றும் அதிர்ஷ்டம் சார்ந்தே உள்ளன. எனவே சந்தையில் பணம் மற்றும் செல்வம் சமமாக எல்லோரிடம் இருப்பதில்லை. இத்தகைய சூழலை அகற்ற அரசின் தலையீடு அவசியம்.

எ. **இறக்குமதி தடை விதிப்பது (Restrictions on import)**

தடையில்லா வாணிபத்தில் வெளிநாட்டு பொருட்கள் இந்தியாவில் எளிதில்

நுழைவதால் உள்நாட்டு நிறுவனங்கள் கடுமையான போட்டியை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படுகின்றது. எனவே வெளிநாட்டு பொருட்களை இறக்குமதி செய்வதை தடை விதிப்பது மூலம் உள்நாட்டு பொருட்களின் வாணிப நிலை வளருகின்றது. இதற்கு அரசாங்கம் கடுமையான இறக்குமதி கொள்கையை கடைபிடிக்க வேண்டும். எளிதில் இறக்குமதி உரிமம் வழங்க கூடாது.

**5. சேமிப்பு வீதத்தை உயர்த்துவது (Optimisation of Rate of Savings)**

எந்த ஒரு நாட்டிலும் மூலதனம் குறைவாக காணப்பட்டால் அதன் வளர்ச்சி குறைவாக காணப்படும். ஆகவே மக்களிடம் சேமிக்கும் பழக்கத்தை அரசு ஊக்குவிப்பதன் மூலம் நாட்டில் சேமிப்பு திட்டம் பெருக வாய்ப்புள்ளது.

**6. மனித நேய சேவை வசதி (Provision of Humanitarian Service)**

குறைந்த பட்ச கூலி, அதிகபட்ச வேலை நேரம், குறைந்த தொழிலாளர் ஒழிப்பு திட்டம், தொழிலாளர் நலன், பாதுகாப்பு வயதான காலத்தி ஓய்வூதிய திட்டம் விபத்து காப்பீடு போன்ற நலத்திட்டங்களை தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் வழங்க வேண்டும். அத்தகைய வசதிகள் முறையாக வணிக நிறுவனங்கள் செய்து வருகின்றதா என அரசு கவனிக்க வேண்டும்.

**அரசு தலையீடு இயல்பு (Nature of Intervention)**

அரசே ஒரு தொழில் முனைவோராகவும், ஒழுங்குப்படுத்துபவராகவும், தோற்றுவிப்பராகவும், ஏற்றுக்கொள்பவராகவும் விளங்குவதே அரசாங்கம் சமுதாயத்திற்கும், வணிக நிறுவனங்களுக்கும் ஆற்றும் தலையீடாகும்.

**1. அரசாங்கமே தொழில் முனைவோராக விளங்குவது (Government as an Entrepreneurs)**

அரசாங்கமே பொதுத்துறை நிறுவனங்களை ஏற்படுத்துவது அல்லது தனியார் துறை, தேசீயமயமாக்குவதன் மூலம் அரசு ஒரு தொழில்முனைவோராக விளங்குகின்றது. இந்தியாவில் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவை துறையில் அதிக அளவில் பொதுத்துறை நிறுவனங்கள் ஈடுபடுகின்றன. இதன் மூலம் இறக்குமதி குறைந்து பின்தங்கிய இடங்களில் தொழில் வளம் பெருகுகின்றது.

**பொதுத்துறை ஏன் அவசியம் (Why Public Sector)**

கீழ்க்கண்ட காரணங்களால் பொதுத்துறை நிறுவனங்கள் இந்தியாவுக்கு அவசியமாக விளங்குகின்றது.

**1. திட்டமிட்ட பொருளாதாரத்திற்கு அவசியம் (Need for a planned Economy)**

திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தில் அரசு தொழில் முனைவோர் பணியை செய்ய வேண்டியிருப்பதால் அரசு பொதுத்துறை நிறுவனங்களை ஏற்படுத்துகின்றது.

**2. போதுமான நிதியின்மை மற்றும் தொழில்கூடம் அடிப்படை வசதி இல்லாமை (Lack of Capital and insufficient industrial base)**

தனியார் துறை நிறுவனங்கள் போதுமான நிதியில்லாமலும், தொழில் துவங்க போதிய வசதி இல்லாததால் பொதுத்துறை நிறுவனங்களை அரசு ஏற்படுத்தி வருகின்றன. பொதுத்துறை நிறுவனங்களில் அரசின் மூலதனம் அதிகமாக காணப்படுகிறது. அதன் நிர்வாகம் மற்றும் செயல்பாட்டில் அரசின் குறுக்கீடு உள்ளது.

**3. நுகர்வோரின் நலன் பாதுகாப்பது (Protection of Consumer Interest)**

முற்றுரிமை தடை சட்டம், நேர்மையற்ற வணிக தடைகளை அரசு சட்டமாக கொண்டு

வந்து தடுப்பதால் நுகர்வோரின் நலன் பாதுகாப்படுகின்றன. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் மூலம் நுகர்வோரின் உரிமைகளும், பாதுகாப்பும், நுகர்வோருக்கும் கிடைக்க அரசு உதவுகின்றது.

4. தேசிய வருவாய் பெருக (To augment in National dividend)

பொதுத்துறை நிறுவனங்களில் மூலம் அரசுக்கு ஆண்டு தோறும் பல கோடி வருவாய் கிடைக்கின்றன. இதனால் நாட்டின் தேசிய வருமானம் பெருகுகின்றது.

5. சமச்சீரற்ற வட்டார பொருளாதாரத்தை குறைத்தல் (To reduce Regional imbalances)

ஒரே இடங்களில் தொழில் வளம் குவிவதால் செல்வம் பொருளாதாரம் ஒரே இடத்தில் குவிகின்றது. இதனை தடுக்க அரசாங்கம் பல்வேறு இடங்களில் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களை ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதார குவிவை தடுக்க முடியும். பின் தங்கிய இடங்களில் பொதுவாக தனியார் நிறுவனங்கள் தொழில் துவங்க முன் வருவதில்லை. அத்தகைய நிலையில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து பொதுத்துறை நிறுவனங்களை நிறுவுகின்றது.

2. அரசாங்கம் ஒரு ஒழுங்குப்படுத்துபவராக என்ற நிலையில் (Government as a Regulator)

அரசாங்கம் ஒரு தொழில் முனைவோர் என்ற நிலையில் கடந்த காலங்களில் அதிக அளவு பொதுத்துறை நிறுவனங்களை ஏற்படுத்தி சாதனை ஏற்படுத்தி வந்தன. நாட்டின் மொத்த உற்பத்தியில் மத்திய மற்றும் மாநில அரசுக்கு சொந்தமான பொதுத்துறை நிறுவனங்கள், அரசு கம்பெனிகள் பொருட்கள் மற்றும் சேவை அளிப்பில் கிட்டத்தட்ட ரூ.1,00,000 கோடி மதிப்புக்கு பொருளை உற்பத்தி செய்தது. இது கிட்டத்தட்ட நம் நாட்டின் மொத்த உற்பத்தியில் பாதிக்கு மேல் உள்ளன. 1985 - 86 அந்நிய செலவாணியாக ரு.58,315 கோடி பொதுத்துறை மூலம் அரசு பெற்றது. 1961ல் 54.55% வேலைவாய்ப்பு பொதுத்துறை மூலம் மக்களுக்கு கிடைத்துள்ளது. 1981ல் அது 68% உயர்ந்துள்ளது. பொதுத்துறை வளர்ச்சி மூலம் நாட்டின் பொருளாதாரம் வள்ர்ச்சியடைந்துள்ளது.

தொழில் மற்றும் வியாபார நடவடிக்கையில் அரசு பல கட்டுப்பாடுகளை விதித்து வந்தன. அவை

1. நேரடி கட்டுப்பாடு 2. மறைமுக கட்டுப்பாடு

நேரடி கட்டுப்பாடு மூலம் அரசு எதிர்பார்த்த முடிவுகள் செலவில்லாமல் நல்ல திறம்பட குறித்த வேளையில் நிறைவேற்ற முடிந்தது. சட்டங்கள் மூலம் அரசு நேரடி கட்டுப்பாடுகளை பொதுத்துறை மீது கொண்டு வந்தன. தொழில் உரிமம் வழங்குவது குறித்து தொழில் கொள்கை தீர்மானம் போன்ற சட்டங்கள் மூலம் அரசு எளிதாக நேரடியாக கட்டுப்பாடு செய்ய முடிந்தது. அந்நிய செலவாணி ஒழுங்காற்று சட்டம், முற்றுரிமை தடை வர்த்தக நடைமுறை சட்டம் மூலம் நேரடி கட்டுப்பாடு அரசு கொண்டு வந்துள்ளது. மேலும் சேமிப்பு மற்றும் முதலீடுகளில் அரசு நேரடி கட்டுப்பாடு கொண்டு வந்துள்ளது. பங்கு முதல் வெளியீடு கட்டுப்பாடு சட்டம் மூலம் முதலீடு மீது அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது.

3. அரசு தோற்றுவிப்பாளர் மற்றும் ஏற்பவர் நிலையில் (Government a Promoter and a caretaker)

கிராமப்புறம், மற்றும் நகர்புறங்களில் தொழில் வளம் பெருக அரசாங்கம் பல்வேறு நிதி உதவிகளையும், வசதிகளையும் செய்து வருகின்றன. அவை அடிப்படை வசதிகள், மாவட்ட அளவில் தொழில் பண்ணைகள் எற்படுத்துவது, தொழில் கூடம் எல்லா இடங்களிலும் பெருக, அந்நிய முதலீடு அதிகரிக்க செய்வது, பின்தங்கிய இடங்களில் தொழில் கூடம் அமைக்க ஊக்கத்தொகை

வழங்குவது, வரிச்சலுகை, மின்சாரவசதி, போன்ற வசதிகளை அளிப்பதன் மூலம் நாட்டில் தொழில் வளம் பெருக வாய்ப்புள்ளது.

**தாராளமயமாக்குதல் கொள்கை (Recent Liberalisation Movemevnt)**

தொழில் வளர்ச்சி நாட்டில் பெருக அரசு தாராளமயமாக்குதல் கொள்கையை கடைபிடிப்பதன் மூலம் பின்வரும் நன்மைகள் கிடைக்கின்றன.

தொழில்நுட்ப வளர்ச்சி, அயல்நாட்டு நிதிவசதி, கச்சாப்பொருள், இயந்திரம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வது போன்ற வசதிகளை அரசு செய்து தருவதன் மூலம் நாட்டில் தொழில் வளர்ச்சி வியக்கத்தக்க வகையில் முன்னேறுகின்றன.

### *வினாக்கள்*

1. அரசாங்கம் ஏன் தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்தில் தலையிடுகின்றது? காரணங்களை கூறுக.
2. அரசாங்கமும், தொழில் நிறுவனமும் ஒன்றை ஒன்று சார்ந்தது. இந்த கூற்று சரி? விவரி?
3. அரசின் தலையீடு என்றால் என்ன? ஏன் தொழில் நிறுவனங்களில் அரசாங்கம் குறுக்கீடு செய்கின்றது. அதன் காரணங்களை விவரி?
4. இந்தியாவில் பொதுத்துறை நிறுவனங்கள் ஆற்றும் பங்கை விவரி?
5. பொதுத்துறை நிறுனங்கள் ஏன் இந்தியாவில் அவசியமாக விளங்குகின்றது?

❖❖❖

# பாடம் –8

## தொழிற் கொள்கையின் வளர்ச்சி
## (Development of Industrial Policies)

1984ல் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆட்சிக்காலத்தில் புதிய தொழிற் கொள்கை அறிவிக்கப்பட்டது. இவரது காலத்தில் சிறிய மற்றும் பெரிய தொழிற்கூடங்களுக்கான முக்கியத்துவம் சமமாக வழங்கப்பட்டன. தொழிற்வளர்ச்சிக்கான இறக்குமதியால் சில தடைகள் விதிக்கப்பட்டன. தொழிற்சாலை உரிமம், விலை கட்டுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திரு.ராஜிவ்காந்தி அவர்கள் ஆட்சிக்காலத்தில் தாராளமாயமாக்குவதன் இயக்கம் உண்மையான நிலையை அடைந்தது. ஏழாவது மற்றும் எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் தொழில் கொள்கைகளில் பல மாறுதல்களை ஏற்படுத்தப்பட்டது.

**இந்திய அரசியலமைப்பு (Political Constitution of India)**

தொழில் நிறுவனங்களில் அரசு தலையீடு வேண்டும் என்ற கொள்கை இந்திய அரசியலமைப்பு சாசனத்தில் உள்ளன (பகுதி III) அடிப்படை உரிமை, பகுதி IV அரசு கொள்கையின் கோட்பாடுகள்.

அரசியலமைப்பின் தலையாய கோட்பாடானது அரசாங்கம் சமூகம், பொருளாதாரம், அரசியல், நீதி, சமத்துவம் போன்றவைகளை நிலநாட்டி உயரிய நோக்கத்தை உடைவதாகும்.

**அடிப்படை உரிமைகள் (Fundamental Rights)**

1. சம உரிமை
2. பேசும் உரிமை
3. சுரண்டல், லஞ்சம்

4. பண்பாடு, கல்வி உரிமை
5. மத உரிமை
6. அரசியலமைப்பு மாற்றும் உரிமை

ஆகியவை ஒரு மனிதனின் அடிப்படை உரிமைகளாகும். அரசுக்கு இத்தகைய உரிமைகளை வரையறை செய்ய ஓரளவு உரிமையுள்ளது.

**அரசுக்கொள்கை;ககான கோட்பாடு (Directive Principles of state Policy)**

இது இந்திய அரசியலமைப்பின் சிறப்பு அம்சமாகும். இது விதி 38,39,41 முதல் 43 மற்றும் 43A கூறப்பட்டுள்ள சமூக பொருளதார சம்பந்தபட்டவையாகும். இதன் மூலம் தனியார் துறை நிறுவனங்களை கட்டுப்படுத்த முடிகின்றது.

**விதி 39 (Article 39)ன் முக்கியத்துவம்**

1. இந்திய குடிமகனாகிய எவரும் வாழ்வதற்கு தேவையானவைகளை பெற உரிமை பெற்றிருப்பது.
2. இயற்கை வளங்களை பெறுவதும் கட்டுப்படுத்தும் உரிமை.
3. ஆண் மற்றும் பெண்ணுக்கு சமமான வேலைக்கு சமமான கூலி பெறும் உரிமை.
4. தொழிற்கூடங்களில் சுகாதாரம், பாதுகாப்பு போன்ற வசதிகளை செய்துக் கொடுப்பது.

**தொழிற்கொள்கை தீர்மானம் 1948 (Industrial Policy Resoiutions 1948)**

தொழிற் கொள்கை தீர்மானம் மூலம் இந்தியாவில் தொழில் வளர்ச்சிக்கு ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளது. கலப்பு பொருளாதாரத்தில் தனியார் துறையும், பொதுத்துறையும் இணைந்து தொழில் முன்னேற்றத்திற்கு மிகவும் உறுதுணையாக விளங்கி வந்தன.

**தொழிற் கொள்கையின் நோக்கங்கள் (Objectives of the Policy)**

1. நீதி, நேர்மை, சம உரிமை போன்ற சமூக அடிப்படையில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி தருவது.
2. மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவது
3. உற்பத்தியை அதிகரிப்பது
4. வேலைவாய்ப்பை அளிப்பது

**கொள்கையின் சிறப்பியல்புகள் (Features of the Policy)**

தொழிற் கொள்கையின் சிறப்பியல்புகள் பின்வருமாறு

**1. தொழிற்சாலைகளை வகைப்படுத்துதல் (Classification of Industries)**

தொழிற்சாலைகள் நான்கு வகையாக பிரிக்கப்படுகின்றன. அவை

1. ஏற்படுத்தக் கூடிய தொழிற்கூடம் முற்றிலும் அரசுக்கு சொந்தமான முற்றுரிமை உடையதாகயிருப்பது.
2. மிக முக்கியமான துறைகளை பொதுத்துறைக்கு ஒதுக்கி பொதுத்துறைகளை ஏற்படுத்துவது.
3. அடிப்படை தொழிற கூடங்களில் தனியார் துறைகளை எற்படுத்த அனுமதி அளிப்பது ஆனால் அதன்மீது மத்திய அரசின் கட்டுப்பாடு, ஆதிக்கம் செலுத்துவது.
4. மீதமுள்ள தொழிற்சாலைகளை தனியார் மற்றும் கூட்டுறவு துறைகளுக்கு விட்டுவிடுகின்றது.

**2. சிறுதொழில்களின் பணி (Role of Small Industries)**

சிறு தொழில்கள், குறுந்தொழில்கள், மற்றும் குடிசை தொழில்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வழங்குவது.

**3. அந்திய நாட்டு மூலதனம் (Foreign Capital)**

இந்தியாவில் உள்நாட்டு முதல் குறைவாகயிருப்பதால் வெளிநாட்டு மூலதனம் அதிகமாக தேவைப்படுகிறது. இதனால் அயல்நாட்டு தொழில்நுட்பம் நமக்கு கிடைப்பதன் மூலம் தொழில்மயமானது எளிதாகின்றது.

**4. பாதுகாப்பான வரிக்கொள்கை (Protective Tariff Policy)**

அரசாங்கம் இறக்குமதி பொருளுக்கு வரிவிதிப்பதன் மூலம் போட்டி குறைகின்றது. இதன் மூலம் இந்திய வளங்களை முறையாக பயன்படுத்தி நுகர்வோர் சுமை குறைகின்றது.

**தொழில் கொள்கையின் மதிப்பீடு (Evaluation of Policy)**

தொழில் கொள்கை தீர்மானம் 1948ல் மதிப்பீடுகை செய்ய பின்வரும் காரணிகள் முக்கியமானதாக விளங்குகின்றன. அவை

**1. தொழில் கொள்கை பின்னணி காரணிகள் (Factors behind the policy)**

இந்தக் கொள்கை அறிவித்த பொழுது அரசியமைப்பானது சமுதாயத்தின் ஜனநாயக அமைப்பை முழுமையாக வடிவமைக்கவில்லை. திட்டக் குழு ஏற்படுத்தாததால் இந்த கொள்கையான எதிர்காலம் செயல் நடவடிக்கையை வெளிப்படுத்தி வந்தது.

**2. கலப்பின பொருளாதாரம் ஓர் அடிப்படை (Foundation of mixed Eocomy)**

இந்தக் கொள்கை தீர்மானம் மூலமாகவே ஒரு சமூக கலப்பின பொருளாதாரம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொதுத்துறையானது நாட்டின் அடிப்படை வசதிகளை உருவாக்க பொறுப்பு எடுத்துக் கொண்டது. தனியார் துறை பல்வேறு பெரிய உற்பத்தி தொழில்களை உருவாக்க பொறுப்பேற்றன.

**3. அரசின் அதிகப்படியான தலையீடு (Increased interventionof the state)**

அரசாங்கத்தின் குறுக்கீடு அதிகப்படியாகயிருந்ததால் முதலாளித்துவம் மறைந்து ஜனநாயகம் உயிர் பெற்றது. தனியார் துறையின் சாதனைகள் மூலம் நாட்டில் தொழில் வளர்ச்சி அதிகரித்தது. பொதுத்துறை காட்டிலும் தனியார் துறையின் பணி சிறப்பாக இருந்தாலும் நாளடைவில் அரசாங்கத்தின் குறுக்கீடு மூலம் வளர்ச்சி குறைந்து காணப்பட்டன.

**தொழில் கொள்கையின் குறைபாடுகள் (Defects of the Policy)**

1. இதில் ஒருங்கிணைப்பு இல்லாததால் கொள்கையானது சிறுசிறு பிரிவுகளாக பிரிந்து விடுகின்றன.
2. மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் ஒரு சுமூகமான உறவை இது ஏற்படுத்தவில்லை.
3. அரசாங்கமானது எந்த அளவு தொழில் வளர்ச்சியானது ஒரு நாட்டை முன்னேற்ற பாதையில் அழைத்து செல்கிறது. என ஆணித்தரமாக சொல்லவில்லை.
4. இது கோட்பாடு போல் அமைந்துள்ளது. நடைமுறைக்கு பொருந்தவில்லை.

**தொழில் கொள்கை ஏற்பத்திய பிறகு நிகழ்ந்த நிகழ்ச்சிகள் (Factors occured after the adoption of the policy)**

1. **திட்டக்குழு ஏற்படுத்தப்பட்டன (Setting up of the Planning Commission)**

இந்தக்கொள்கை கொண்டு வந்த பிறகு இந்தியாவில் முதன் முதலாக திட்ட கமிஷன் ஏற்படுத்தப்பட்டன.

2. **தொழிற்சாலை வளர்ச்சி மற்றும் ஒழுங்காற்றும் சட்டம் நிறைவேற்றப்பட்டன. (Enactment of the IDR ACT)**

இந்தக் கொள்கை ஏற்படுத்திய பிறகுதான் தொழிற்சாலை வளர்ச்சி மற்றும் ஒழுங்காற்றும் சட்டம் (Industries Development and Regulation Act), 1951ல் நிறைவேற்றப்பட்டன. புதிய தொழிற்சாலைகள் அமைக்கவோ அல்லது விரிவாக்கம் செய்வதாக இருந்தால் இந்த சட்டத்தின் படி, உரிமம் பெற வேண்டும். தேவைப்பட்டால் அரசாங்கமே அந்த தொழிற்கூடங்களை எடுத்துக் கொள்ள உரிமை வழங்கப்பட்டுள்ளது.

3. **அரசியல் அமைப்பு சட்டம் (Enactment of Political Constitution)**

அரசியலமைப்பில் காணப்படும் ஒவ்வொரு வார்த்தையும் பல தடவை நன்கு ஆலோசித்து விவாதித்த பின்னரே ஏற்படுத்தப்பட்டன.

4. **பொருளாதார நோக்கம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றபபடடது. (Passing of Econonomic Objectives)**

**Resolution of 1954:**

பொருளாதார நோக்க தீர்மானம் 1954ல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. சமுதாயத்தை ஜனநாயக அமைப்பில் உருவாக்குவதே நமது நாட்டின் குறிக்கோளாகும் என இந்த தீர்மானம் பிரகடனம் செய்துள்ளது. இதன் மூலம் இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி வீதம் உயர்ந்து காணப்பட்டது. வருமானம், செல்வம் ஆகியவற்றின் வாய்ப்புகள் சமமாக பங்கீடுவதும் தனியார் துறை இலாபம் பெறுவதற்கு பதிலாக சமுதாயம் பயன் அடைவதே இதன் நோக்கமாகும்.

5. **முதல் ஐந்தாண்டு திட்டம் அமுல்படுத்துதல் (Implementation of the first five year plan)**

வளர்ந்து வரும் நாடுகளில் (இந்தியா உட்பட) மக்கள் தொகையில் பாதிக்கும் மேல் உள்ளவர்களை விவசாயமும் அதனை சார்ந்த பிற தொழில்களிலேயே ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக நமது நாட்டில் 70% மக்கள் தங்களது வாழ்க்கையை நடத்த முழுமையாக விவசாய தொழில்களிலேயே ஈடுபட்டு வருகிறார்கள்.

நாட்டில் தொழிற்சாலையின் வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்து வரும்பொழுது விவசாயத்தைவிட தொழிற் கூடங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இருந்தாலும் விவசாயத்தை புறக்கணிக்கமுடியாது. இரண்டு துறைக்கும் சமமான வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டது. விவசாயத்தில் புதிய தொழில் நுட்பங்கள் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.

முதல் ஐந்தாண்டு திட்டத்தில் விவ்சாயத்திற்கு அதிக முன்னுரிமையும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டு வந்தன. அடுத்தது விவசாய இயந்திரங்களை உருவாக்கும் தொழிற்சாலைகளில் முதலீடு செய்ய ஊக்குவிக்கப்பட்டன.

6. **தொடர்ச்சியான கட்டுப்பாடு (Continuance of Controls)**

துறைகள் கட்டுப்படுத்த பல்வேறு சட்டங்களை கொண்டு வரப்பட்டன. எ.கா. அந்நியசெலவாணி ஒழுங்குமுறைச் சட்டம், ஏற்றுமதி இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டம், ரயில்வே சட்டம், கப்பல் கட்டுபாடு சட்டம், ரப்பர் சட்டம் விலை மற்றும் விநியோக கட்டுப்பாடு

*போன்றவைகள் முதல் ஐந்தாண்டு திட்டம் 1951-56ல்* நிறைவேற்றப்பட்டன. விவசாய வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்ட இந்த திட்டம் வெற்றியைக் கண்டது.

### தொழிற்சாலை கொள்கை தீர்மானம் 1957 (Industrial Policy Resolution of 1957)

இந்த தீர்மானம் 1948லிருந்து 8 ஆண்டுகள் வரை (அதாவது 1948 முதல் 1956 வரை) அமுலில் இருந்தது. இரண்டாவது தீர்மானம் 1956ல் அரசு கொண்டு வந்தது. அதன்பிறகு முதல் தீர்மானம் முடிவடைந்தது.

### இந்த புதிய கொள்கை கொண்டு வரக்காரணங்கள் (Reasons for adopting New policy)

1. அடிப்படை உரிமைகளை நிலை நாட்டுவது
2. சமூகம் மற்றும் பொருளாதார கொள்கையின் நோக்கமாகிய ஜனநாயக முறையை கொண்டு வர ஒப்புதல் அளிப்பது.
3. முதல் ஐந்தாண்டு திட்டம் விவசாய துறையில் வெற்றிபெற்றதின் விளைவாக.
4. திட்டக்குழுவை (Planning Commission) ஏற்படுத்துவது.

### புதிய தொழிற்கொள்கை 1956ன் நோக்கங்கள் (Objectives of the policy of 1956)

1. இந்தியாவில் பரவலாக தொழிற்கூடங்கள் ஏற்படுத்தி தொழிற் மயமாக்குதல்.
2. கனரக தொழிற்சாலை மற்றும் இயந்திர தொழிற்சாலைகளை நிறுவுதல்.
3. பொதுத்துறை நிறுவனங்களை விரிவுப்படுத்துதல்
4. கூட்டுறவு துறையை வளர்ச்சியடைய செய்வது.
5. செல்வம் மற்றும் வருமானம் ஆகியவை நாட்டில் சம அளவாக வைப்பது.
6. குறிப்பிட்ட சில வகை சேவை மற்றும் பொருட்கள் தனியார் வசம் குவிவதை தடுப்பது, முற்றுரிமையை ஒழிப்பது.
7. வேலைவாய்ப்பு அளிப்பது, உழைப்பாளர்களின் வாழ்க்கை தரம் உயர்த்துவது ஆகியவைகள் இந்த கொள்கையின் நோக்கமாகும்.

### தொழிற்கொள்கை தீர்மானம் 1956ன் சிறப்பியல்புகள் (Features of the Resolutions of 1956)

இந்தக் கொள்கை தீர்மானம் மூலம் தொழிற்சாலைகள் மீண்டும் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன.

#### பிரிவு அ (Category A)

தீர்மானத்தில் உள்ள அட்டவணை A யில் உள்ளவைகள் அனைத்தும் இந்த பிரிவில் காணப்படும். இந்த அட்டவணையில் 17 தொழிற்சாலைகள் உள்ளன. அந்தந்த மாநில அரசுகளே இதன் வளர்ச்சிக்கு முழு பொறுப்பாக விளங்குகிறது.

#### பிரிவு ஆ (Category B)

தீர்மானத்தில் உள்ள அட்டவணை Bயில் உள்ளவைகள் அனைத்தும் இந்த பிரிவில் காணப்படும். அட்டவணை Bயில் 12 தொழிற்சாலைகள் உள்ளன.

#### பிரிவு இ (Category C)

இந்த பிரிவில் மீதமுள்ள தொழிற்கூடங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் தனியாரும், அரசு துறையும் தொழிற் கூடங்களை தொடங்க அனுமதி வழங்கலாம்.

2. **தனியார் துறையை ஊக்கப்படுத்துதல் (Encouragement to the private sector)**

இந்த தீர்மானத்தின் மூலம் தனியார் தொழிற் கூடங்களை தொடங்க ஊக்கம் அளிக்கப்பட்டன.

3. பொதுதுறை மற்றும் கனரக தொழிற்கூடங்கள் தனக்கு வேண்டியவைகளை தனியார் துறையிடமும், தனியார் நிறுவனம் தங்களுக்கு வேண்டியவைகளை பொதுத்துறையிடம் பெற அனுமதி அளிப்பது.

4. **சிறுதொழில்கள் மற்றும் குடிசை தொழில்கள் (Small and Cottage Industries)**

நமது நாட்டின் தொழிற் வளர்ச்சிக்கு குறுந்தொழில்கள் (Tiny Sector) சிறு தொழில்கள் மற்றும் குடிசை தொழில்கள் பெரிதும் உதவுகின்றன. பெரிய நிறுவனங்களின் போட்டியை சமாளிக்க பல்வேறு வழிகளில் நல்ல திட்டங்களில் செயல்பட சிறு தொழில்களுக்கு இந்த தீர்மானம் உதவுகின்றது.

5. **வட்டார அளவில் காணப்படும் சமச்சீரற்ற வளத்தை குறைப்பது (Reduction of Regional Disparties)**

மிகவும் பின்தங்கிய இடங்களில் தொழிற்கூடம் பெருக தேவையான நிதி, மின்சாரம், தண்ணீர், போக்குவரத்து போன்ற சலுகைகள் அளிப்பதன் மூலம் நாட்டில் வருமானமும் செல்வமும் சமநிலையில் இருக்க இந்த தீர்மானம் உதவுகின்றது.

6. **திறமையான தொழில் நுட்ப வல்லுநர்கள், மேலாண்மையினர் நியமனம் (to appoint technical and magaerial personnel)**

பொதுத்துறை மற்றும் சிறு நிறுவனங்களில் நல்ல திறமையற்ற தொழில் நுட்ப வல்லுநர்களையும் மேலாண்மையினரும் அவசியம். அத்தகைய சிறப்பு தேர்ச்சி பெற்றவர்களை நியமனம் செய்ய இந்த தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

7. **பணியாளர்களுக்கு வசதிகளையும், ஊக்கத்தொகையும் வழங்குதல் (Amenities and incentives for Labour)**

நல்ல தொழில் உறவு மலர வேண்டுமானால் தொழிலாளர்களுக்கு தேவையான வீட்டுவசதி, மருத்துவம், கல்வி, போக்குவரத்து, போனஸ், ஊக்கத்தொகை, பதவி மேம்பாடு போன்ற வசதிகளை முதலாளி செய்து தரவேண்டும். பொதுத்துறை நிறுவனங்களில் தொழிலாளர்களின் நிர்வாகத்தில் பங்கேற்பு அவசியம் என இந்த தீர்மானம் கூறுகின்றது.

### கொள்கை 1956 பற்றிய விமர்சனங்கள்:- (Criticisms)

1. இந்தக் கொள்கை தீர்மானம் மூலம் தனியார் துறையின் முக்கியத்துவம் குறைக்கப்படுகிறது.
2. பொதுத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு தனியார்துறைக்கு முக்கியத்துவம் இல்லாமல் போய்விட்டது.
3. இது நெகிழ்ச்சி தன்மையற்றது.

### தொழிற் கொள்கை அறிக்கை 1977 (Industrial Policy Statement of 1977)

ஜனதா கட்சி 1977ல் ஆட்சிக்கு வந்ததும் புதிய தொழிற்கொள்கையை ஒரு அறிக்கையாக அறிவித்தது. அதுவே தொழிற் கொள்கை அறிக்கை 1977 ஆகும்.

### அறிக்கையின் சிறப்பியல்புகள் (Features of the Statement)

1. **சிறுதொழில்களை மேம்படுத்துதல் (Dromotion of Small Sector)**

புதிய தொழிற்கொள்கையின் முக்கிய அம்சமே கிராமபுறத்தில் செயல்படும் சிறு தொழில்கள்,

குடிசை தொழில்களை கிராமபுறங்களிலும், சிறு நகரங்களிலும் பரவச் செய்து அந்த தொழிலை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.

2. பெரிய தொழில் நிறுவனங்களுக்குரிய பகுதிகள் (Area for Large Sector)

சிறுதொழில்கள், விவசாயம் மற்றும் மக்கள் தொகைக்கு ஏற்ற தேவையானவைகளை பூர்த்தி செய்வதே பெரிய நிறுவனங்களின் பணிகளாகும். ஆகவே பெரிய நிறுவனங்கள் செயல்படும் எல்லையை இந்த அறிக்கையில் வரையறுக்கப்பட்டன.

3. பெரிய நிறுவனங்களுக்குரிய கொள்கை (Policy towards Large House)

பெரிய நிறுவனங்கள் தங்களின் நிதி தேவைக்காக நிதி நிறுவனங்களை சார்ந்திராமல் எதிர்கால விரிவாக்கத்திற்கு உதவவேண்டும். பெரிய நிறுவனங்களின் தாங்களே சொந்தமாக கம்பெனிக்குள் நிதியை உருவாக்க வேண்டும்.

4. பொதுத்துறையின் பங்கு (Role of Public Sector)

பொதுத்துறை நிறுவனங்கள் முற்றுரிமையுள்ள தனியார் நிறுவனங்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.

5. பின்தங்கிய இடங்களை வளர்ச்சியடையச் செய்தல் (Development of Backward Areas)

பெரிய நிறுவனங்கள் பெரும்பாலும் பம்பாய், கல்கத்தா, மற்றும் சென்னை போன்ற பெருநகரங்களிலும், நகரங்களிலும் ஏற்படுத்தப்படுகின்றன. இதனால் பின் தங்கியே கிராமப்புறங்கள் வளர்ச்சியடையவில்லை. இதனை கருத்தில் கொண்டு பின்தங்கிய இடங்களில் ஏற்படுத்தப்படும் தொழிற் இடங்களுக்கு அரசு பல உதவிகள் செய்வதாக இந்த அறிக்கை மூலம் தெரிவிக்கின்றது.

**விமர்சனங்கள் (Criticism)**

1. பெரிய நிறுவனங்கள் உடனே தங்களுடைய எண்ணங்களை மாற்ற முடியாது.
2. சிறு தொழில் பற்றிய சரியான வரைவிலக்கணம் தரப்படவில்லை.
3. சிறு தொழில்களுக்கு அதிக பணிகள் வழங்குவதால் பிரச்சனை ஏற்படலாம்.

## தொழில் கொள்கை அறிக்கை 1980 (Industrial Policy Statement of 1980)

1980ல் திருமதி இந்திராகாந்தி அவர்கள் ஆட்சிக்கு வந்தபொழுது இந்த அறிக்கை அறிவிக்கப்பட்டது.

**நோக்கங்கள் (Objectives)**

1. தொழிற்கூடங்களில் பயன்படுத்தும் இயந்திரங்கள் அதன் கொள்ளவு திறனை முழுமையாக பயன்படுத்துவது.
2. பேரளவு உற்பத்தி மூலம் உற்பத்தித் திறனை அதிகரிக்க செய்வது.
3. அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது.
4. நாட்டில் பணம், செல்வம் வட்டார அளவில் சமநிலையில் இருக்க உதவுவது.
5. விவசாயத்தை பலப்படுத்துவது.
6. ஏற்றுமதியை ஊக்குவிப்பது.
7. நுகர்வோருக்கு பாதுகாப்பு வழங்குவது போன்ற சமூக பொருளாதார நோக்கங்களை இது அறிக்கை கொண்டுள்ளது.

**சிறப்பியல்புகள்**

1. **பொதுத்துறை சீரமைத்தல்**

பொதுத்துறையில் செயல்பாடுகள் மக்களுக்கு நம்பிக்கை அளிக்காததால் அதன் நிர்வாகம், செயல்பாடுகளை மாற்றியமைப்பது.

2. **சிறு தொழில்களுக்கு உதவுவது (Help for Small units)**

சிறு தொழில்களை வளர்ச்சியடையச் செய்வதே இந்த அறிக்கையின் நோக்கமாகும். அதன்படி பின்வருமாறு முதலீட்டின் உச்சவரம்பு உயர்த்தப்படுகின்றன.

1. சிறுதொழில்கள் - ரூ.10லட்சம் முதல் ரூ.20 லட்சம் வரை
2. துணை நிறுவனங்கள் - ரூ.15 லட்சம் முதல் ரூ.25 லட்சம் வரை (Ancilliary units)
3. குறுந்தொழுல (tiny units) - ரூ.1 லட்சம் முதல் ரூ.2 லட்சம் வரை

4. **பெரிய நிறுவனங்களுக்கு சலுகைகள் (Concession to large Sector)**

வருமான வரிச்சலுகை, உபரி கொள்ளவுக்கு தாராளமாக உதவுதல் போன்ற சலுகைகள் பெரிய நிறுவனங்களுக்கு வழங்குதல்.

5. **மின்உற்பத்தி (Energy Generation)**

சூரிய ஒளி, தண்ணீர் போன்றவைகள் மூலம் மின்உற்பத்தி செய்வது.

6. **சமச்சீரான சூழல் (Ecological Balance)**

தொழிற் கூடங்களை சுற்றியுள்ள மக்கள் வாழும் பகுதிகளில் காணும் சூழல்களை சமச்சீரான பாதுகாப்பது தண்ணீர், காற்று போன்றவற்றால் ஏற்படும் அசுத்தங்களை கட்டுப்படுத்துவது.

❖❖❖

# பாடம் –9

## உரிமமக் கொள்கையும் மற்றும் ஒழுங்குப்படுத்துதலும் (Licencing Policy and Regulation)

உரிமை வழங்கும் சுதந்திரம் பெற்ற பிறகே ஆரம்பிக்கப்பட்டன. பல்வேறு கட்டுப்பாடுகள் முறைகள் பல இருந்து வந்தன.

தொழிற் கொள்கையை கட்டுப்படுத்த உரிமம் முறை அவசியமாக விளங்குகிறது.

### தொழிற் வளர்ச்சி மற்றும் ஒழுங்குப்படுத்தும் சட்டம் 1951 (Industrial development ana Regulation Act 1951) (IDRA)

இந்தியாவில் தொழிற் சாலைக்கு வழங்கும் உரிமம முறையானது ஒரே மாதிரியாக இருப்பதால் எளிதில் தொழிற் கொள்கையை கட்டுப்படுத்த முடிகிறது தொழிற் உரிமம் முறை தொழிற் வளர்ச்சி மற்றும் ஒழுங்குப்படுத்தும் சட்டம் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

இந்தச் சட்டம் செலக்ட் கமிட்டி மூலம் பாராளுமன்றத்தில் 1951ஆம் வருடம் அக்டோபர் மாதம் மசோதா நிறைவேற்றப்பட்டது. 1952 ஆம் வருடம் மே 8ம் தேதி முதல் அமுலுக்கு வந்தது.

### IDRA சட்டத்தின் நோக்கங்கள் (IRDA - Objectives)

1. நமது நாட்டின் வளங்களை முறையாகவும் அதிக அளவில் பயன்படுத்துவது.
2. நாட்டின் வட்டார பகுதிகள் சமநிலைக்கு கொண்டு வருவது.
3. தட்டுப்பாடான பொருட்கள், அத்தியாவசியப் பொருட்களை எல்லா இடங்களுக்கும் விநியோகம் செய்வது.
4. செல்வம், பணம் ஒரே நபர் கையில் குவிவதை தடுப்பது, பொருளாதார வலிமையை பரவலாக்குதல் முற்றுரிமையை தடுப்பது ஆகியவை இந்த சட்டத்தின் நோக்கமாகும்.

### IDRA சட்டத்தின் செயல்பரப்பு எல்கை (Scope of the IDR.Act)

இந்த சட்டத்தில் 31 பிரிவுகள் உள்ளன. இந்த சட்டத்தின் நோக்க எல்கை பரவலாக காணப்படுகிறது. தொழிற்சாலை அட்டவணைப்படி புதிய தொழிற்கூடங்களை ஏற்படுத்த ஊக்குவிப்பது, புதிய தொழிற்கூடங்கள் தொழிற் தொடங்க மத்திய அரசிடம் உரிமம் பெற வேண்டும். ஏன்கனவே நடைபெற்று வரும் தொழிற் கூடங்களும் மத்திய அரசிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும் என வற்புறுத்துகின்றது.

### முக்கிய பிரிவுகள் (Main Provisions of the ACT)

1. **தேசிய நலனுக்கு எதிராக செயல்படும் தொழிற்கூடங்களின் நடவடிக்கைகளை தடுப்பதற்குரிய முன்னேச்சரிக்கைகள் (Preventive Measures)**
   1. ஏற்கனவே உள்ள தொழிற் கூடங்களை பதிவு செய்யச் கட்டாயப்படுத்துவது.
   2. புதிய தொழிற் கூடங்களுக்கு உரிமம் வழங்குதல்.
   3. தொழிற் கூடங்களை நடவடிக்கைகள், புலனாய்வு செய்தல்.
   4. தேசீய நலனுக்கு எதிராக செயல்படும் தொழிற் கூடங்களின் உரிமத்தை ரத்து செய்தல் இவையாவும் முன்னெச்சரிக்கையான தடுப்பு முறையாகும்.

1. **ஏற்கனவே உள்ள தொழிற்கூடங்கள் பதிவு செய்தல் (Registration of Existing Industrial undertaking)**

முதல் தொழிற்கூட பட்டியலில் உள்ள தொழிற்சாலைகைள் மத்திய அரசிடம் பதிவு செய்ய வேண்டும்.

#### பதிவு செயல்முறைகள்

1. பதிவு செய்வதற்கான தனி படிவங்கள் உள்ளன. அதனை நிரப்பி அதற்குரிய கட்டணம் கருவூலத்தில் செலுத்த வேண்டும்.
2. குறிப்பிட்ட காலத்திற்குள் விண்ணப்படிவத்தை சமர்பிக்க வேண்டும்.
3. அதன்பிறகு பதிவு சான்றிதழ் வழங்கப்படும்.

### பதிவை ரத்து செய்தல் (Revocation of Registration)

மத்திய அரசு பின்வரும் சூழ்நிலைகளில் தொழிற்கூடங்களின் பதிவை ரத்து செய்யலாம்.

1. தவறான தகவல் வழங்கு உரிமம் பெற்ற பொழுது
2. வேறு சில காரணங்கள்

### தொழிற்சாலைக்கான உரிமம் (Licensing of Industrial Undertaking)

IDR சட்டம் மூலம் தொழிற்கூடங்களுக்கு ஐந்து வகையான உரிமம் வழங்கப்படுகிறது.

1. புதிய தொழிற்சாலைக்கு
2. விரிவாக்கத்திற்கு
3. புதிய பொருள் உற்பததுக்கு
4. புதிய இடத்திற்கு தொழிற் கூடத்தை மாற்றுதல்
5. வியாபாரத்தில் ஈடுபட

**1. புதிய தொழிற்சாலைக்கு உரிமம் வழங்குதல்**

(Licence for new undertaking)

பிரிவு 11ன் படி தொழிற்கூடம் ஏற்படுத்துவதற்கு முன்பே உரிமம் பெற வேண்டும். மாநில அரசு தொழிற்கூடம் ஆரம்பித்தாலும் கண்டிப்பாக மத்திய அரசிடம் உரிமம் பெற வேண்டும்.

அதிகபட்ச முதலீடு தொகை ரூ.10 கோடியாகும் - நகர்புறம் ரூ.25 கோடி - பின்தங்கிய பகுதிக்கு

**2. புதிய பொருளை உற்பத்திக்கு உரிமம்**

(Licence for production of a new product)

புதிய பொருள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் கண்டிப்பாக உரிமம் பெற வேண்டும்.

1. உற்பத்திக்காக கூடுதல் கொள்ளவு திறன் பயன்படுத்தும்பொழுது
2. முதல் அட்டவணையில் வரும் தொழிற்கூடங்கள்
3. ஏற்கனவே உள்ள வணிக குறியிடுகளிலிருந்து வேறுபட்டு இருக்கும் பொருளுக்குரிய வணிக குறியிடுகள்
4. புதிய புணை உரிமை பெறுவது போன்ற சூழல்களில் உரிமம் பெற வேண்டும்.

**உரிமம் ரத்துச் செய்தல்**

உரிமத்தில் உள்ள திட்டப்படி தொழிற்கூட உரிமையாளர் நிறைவேற்ற தவறும் பொழுது அவருக்கு வழங்கிய உரிமத்தை மத்திய அரசு ரத்து செய்யலாம்.

**3. விரிவாக்கத்திற்கான உரிமம்** (Licencing for substantial Expansion)

தொழில் நுட்ப விரிவாக்கம், தொழிலாளர் திறன் அதிகரிப்பு பணிமாற்றும் போன்ற சூழல்களால் உற்பத்தியின் கொள்ளளவு அதிகரிக்கும் பொழுது உரிமம் பெறவேண்டும்.

**4. இடமாற்றத்திற்கான உரிமம்** (Licensing for change in location)

தொழிற்கூட உரிமையாளர் சில நேரங்களில் தொழிற் நிறுவன இடத்தை மாற்ற விரும்பினால் அதற்கு உரிமம் பெற வேண்டும்.

**5. தொழில் நடத்துவதற்கான உரிமம்** (Licensing for carrying on Business)

ஏற்கனவே உள்ள தொழிற் கூடங்கள் குறிப்பிடப்பட்ட தேதிக்குள் பதிவுக்கான விண்ணப்பம் செய்ய வேண்டும்.

**உரிமம் பெறும் முறை** (Procedure to obtain a licence)

**1. விண்ணப்ப அழைப்பு** (Invitation for Application)

தொழிற் வளர்ச்சி அமைச்சகம் புதிய தொழிற்சாலை நிறுவக கூடியவர்களுக்கு உரிமம் பெறுவதற்கான அழைப்பிதல் செய்ய வேண்டும.

**2. எப்பொழுது விண்ணப்பம் செய்ய வேண்டும் (When to apply)**

அரசு இதழிலில் (Official Notification) முறைப்படி அறிவிப்பு வந்ததும் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

1. புதியபொருள் உற்பத்தி செய்பவர்
2. புதியதொழிற்கூடம் அமைப்பவர்களுக்கு
3. விரிவாக்கம் செய்ய விரும்புகின்றவர்கள் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

**3. எப்படி விண்ணப்பிக்க வேண்டும் (How to apply)**

RILU விதிகளில் அமைந்துள்ள குறிப்பிடப்பட்டவிண்ணப்பத்தை பயன்படுத்த வேண்டும.

பாரம் D (I), பாரம் D (II), பாரம் E (I), பாரம் E (II), ஆகிய புதிய நான்கு பாரங்களை பயன்படுத்த வேண்டும்.

**4. விண்ணப்பத்திற்கான கட்டணம் (Fees for Application)**

**Pay and Accounts Officer, Munistry of Industry, New Delhi** என்ற பெயருக்கு ரூ.2500 - க்கு ஒரு கேட்பு பணவிடையை பாரத வங்கியில் எடுத்து உரிமத்திற்கு உரிய குறிப்பிடப்பட்ட படிவத்தை நிரப்பி அதில் 8 நகல் எடுத்து **Secretariat for Industrial Approval, Department of Industrial Development, Udyog Bhawan, New Delhi** என்ற விலாசத்திற்கு விண்ணப்பத்தை பணவிடையுடன் சமர்பிக்க வேண்டும்.

**விண்ணப்பத்தை பரிசீலனை செய்யும் கட்டங்கள் (Stages for Processing the Application)**

**1. விண்ணப்பத்தை சரிபார்த்தல், (Scrutiny of the Application)**

விண்ணப்பங்களை முதலில் Secretariat for Industrial Approval Department (SIA) சரி பார்க்கின்றது. முழுமையாக பூர்த்தி செய்யாத அல்லது குறைபாடு உள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன.

**உரிமக் குழலின் ஒப்புதல் (Licensing Committee for Approvals)**

பிரிவு 1ன்படி மத்திய அரசு விண்ணப்பங்களை சரிபார்த்து உரிமம் வழங்கும் பொறுப்பை ஏற்படுத்த ஒரு குழு நியமித்துள்ளது. எட்டு விதமான குழுவை நியமித்து விரைவில் உரிமம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எட்டு குழுவின் பெயர்கள் பின்வருமாறு.

1. Prodject Approval Board
2. Licensing cum MRTP committee
3. Licensing Committee
4. Sub - Committee of the Secretaries for Fertlizer Projects.
5. Kandala Free Trade Zone Board.
6. Santacruz Export processing Zone Board.
7. Board of Approval of 100% Export oriented undertakings.
8. Special Approval Committee (NRI)

இந்த எட்டு குழுவானது உரிமம் வழங்க பரிந்துரை செய்யக் கூடிய குழுவாகும். **Non-MRT** கீம்பெனிகளின் விண்ணப்பங்கள் 30 நாட்களிலும், **MRTP** கம்பெனிகளின் விண்ணப்பங்கள் 60 நாட்களிலும் சரிபார்க்கப்பட்டு உரிமம் வழங்க ஏற்பாடு செய்கின்றன.

3. **விண்ணப்பங்கள் சுற்றுக்கு விடுதல் (Circulation of the application)**

பெறப்பட்ட விண்ணப்பங்கள் அதற்குரிய பொருத்தமான குழுவின் பரிந்துரைக்கு சுற்றுக்கு விடப்படும். அந்த கமிட்டியின் பரிந்துரை குறிப்பிட்ட தேதிக்கள் அமைச்சரிடம் ஒப்படைக்கும்.

4. **கமிட்டியீயன் பரிந்துரைகளின் சுருக்கமான அறிக்கை (Preparation of Summary for Approval Committee)**

பல்வேறு அதிகாரிகளின் விளக்கங்கள், கருத்துரைகள் கேட்ட பிறகு கமிட்டியின் ஒப்புதல் பெறப்படும். பரிந்துரைகள் சுருக்கமாக தயாரித்து அறிக்கை வடிவில் குழு சமர்ப்பிக்கும்.

5. **ஒப்புதல் வழங்கும் கமிட்டியின் சிபாரிசு (Consideration by the Approval Committee)**

உரிமம் அல்லது ஒவ்வொரு விண்ணப்ப பாரமும் கமிட்டியின் பரிந்துரைக்கு உட்பட்டு நடைபெற வேண்டும்.

**விண்ணப்பங்களை பரிசீலனை செய்ய அரசாங்கத்தின் சில வழிகாட்டல்கள் பின்வருமாறு:**

1. ஐந்தாண்டு திட்டத்தில் முன்னுரிமை பெற்ற தொழில் நிறுவனங்களுக்கு முதலில் பரிசீலனை செய்வது.
2. நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு
3. பொருளாதார மற்றும் தொழில் நுட்ப முன்மொழிவு
4. பயன்படுத்தக்கூடிய தொழில் நுட்பம்
5. வணிகபொருள் உற்பத்தி
6. தொழிற் கூட பாதுகாப்பு கருவிகள், உபகரணங்கள் அமைத்து கொடுத்தல்.

6. **தொழில் நுட்ப பற்றிய பரிசீலனை (Technical Scrutiny)**

கச்சாப் பொருளின் விலை, போதுமான பொறிகலன், இயந்திரம், போதுமான மின்சக்தி, எரிபொருள் உள்ளதா என ஆராய்தல்.

7. **ஒப்புதல் அளிக்கும் கமிட்டியின் பரிந்துரைகள் (Recommendation of the Approval Committee)**

தொழிற்கூடங்கள் விண்ணப்பித்த விண்ணப்பாரங்களை பரிசீலனை செய்து, திருப்தியானவைகளுக்கு ஒப்புதல் அளிக்கலாம். திருப்தியற்ற முன்மொழிவு விண்ணப்பங்களை நிராகரிக்கப்படுகிறது.

8. **நிகழ்ச்சிக் குறிப்புகள் ஒப்புதல் அளித்து சுற்றறிக்கை அனுப்புதல்**

கமிட்டி பரிசீலனை செய்த விண்ணப்பாரங்களுக்கு வழங்கிய பரிந்துரைகள் அல்லது நிராகரிப்பை பற்றிய நிகழ்ச்சி குறிப்பை அமைச்சர்கள் பார்வைக்கு அனுப்பப்படும். தொழிற் அமைச்சகத்தின் முடிவே இறுதி தீர்ப்பாகும். கமிட்டியின் நிகழ்ச்சி குறிப்பை அமைச்சகம் ஒப்புதல் அளிக்கலாம்.

1. **உரிமத்திற்கான கடிதம் (Issue of leter of Licence)**

**பரிசீலனை செய்த விண்ணப்பங்களின் ஒப்புதல் கிடைத்த உடன் ஒரு நாட்களுக்குள் உரிமத்திற்கான கடிதம் அனுப்பட வேண்டும்.**

**விண்ணப்பப்படிவங்களை பரிசீலனை செய்து அனுப்பக்கூடிய கால அவகாசம் (Time limit - for dispostal of Appliation)**

1. 100% ஏற்றுமதி நிறுவனம் Promoted by MRTP.

   அந்நிய செலவாணி வழங்குவதை கொண்ட கம்பெனிகள் - 60 நாட்கள்
2. 100% ஏற்றுமதி கொண்ட NONMRTP கம்பெனிகள் - 30 நாட்கள்
3. MRTP கம்பெனியிடமிருந்து பெற்ற விண்ணப்பங்கள் - 90 நாட்கள்
4. பிறவணிக விண்ணப்பங்கள் - 60 நாட்கள்
5. இந்தியரல்லாதவர்கள் செய்த விண்ணப்பங்கள் - 45 நாட்கள்

**விண்ணப்பங்களை நிராகரித்தல் (Rejection of the Applications)**

கீழ்க்கண்ட சூழல்களில் தொழில்கூடத்திற்கு விண்ணப்பித்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றது.

அ. போதுமான கொள்ளளவு திறன் இருக்கும்பொழுது

ஆ. தற்பொழுது உள்ள உரிமமத்திற்கான கொள்கையிலிருந்து விண்ணப்பத்தில் காணப்படும் விபரங்கள் எதிராக இருப்பது.

இ. அரசு நிர்ணயித்த தொழிற்கூட இடத்தில் செயல்படாமல் வேறு இடத்தில் செயல்பட விரும்புவது.

**சிறுதொழில்களுககான விதிவிலக்குகள் (Exemption to Small and Ancillary Units)**

சிறுதொழில்கள் மற்றும் குறுந்தொழில்களுக்கான முதலீடு வரம்பு பின்வருமாறு அரசு நிர்ணயித்துள்ளது.

1. சிறுதொழில்கள் - ரூ.35லட்சம்
2. துணைமற்றும் தொழிகூட நிறுவனம் - ரூ.45 லட்சம்
3. குறுந்தொழில்கள் - ரூ.2 லட்சம்

**விதிவிலக்களுக்கான நிபந்தனைகள்**

சிறுதொழில்கள், குறுந்தொழில்களின் எடுக்கும் தொழிற்கூடங்கள் மத்திய அரசிடம் உரிமம் பெற தேவையில்லை. ஆனால் பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றினால்தான் உரிமத்திற்கான விதிவிலக்கு வழங்கப்படும்.

1. MRTP கம்பெனியென்றால் ரூ.20 கோடிக்கு மேல் சொத்துக்கள் இருக்க வேண்டும்.
2. வெளிநாட்டு கம்பெனியென்றால் நேர்மை பங்குதலால் 40% பங்குமுதல் வெளிநாட்டில் முதலீடு செய்ய வேண்டும்.

**சிறப்பு ஒழுங்குமுறை (Special Regulation)**

**நோக்கங்கள்**

1. இறக்குமதியை குறைப்பது
2. தரமான பொருளை உற்பத்தி செய்வது
3. CKD SKD இறக்குமதி செய்வதை தவிர்ப்பது.
4. சாலை பாதுகாப்பு பராமரிப்பது, விபத்தை தடுப்பது.

**உரிமம் வழங்குவதற்கான நிபந்தனைகள் (Licensing Conditions)**

மத்திய அரசு உரிமம் வழங்கும் பொழுது சில நிபந்தனைகளை விதிக்கின்றன. அவை:

1 இயந்திரங்கள், கச்சாப்பொருட்கள்

2. உற்பத்தி திட்டமிடல்

3. நிதி நிறுவனங்களிடம் கடன் வசதி பெறுவது

4. அயல்நாட்டு ஒப்பந்தம் (நிதிகள் மற்றும் தொழில் நுட்பம்)

5. மாசு படிவதை தடுப்பது

6. அந்நிய செலவாணி முதலீட்டு தொகையில் 40% வெளிநாட்டு இந்தியரை அனுமதிப்பது

1 உற்பத்தி மாற்றம்

2 உற்பத்தி கொள்ளவின் மறு புறக்குறிப்பு

3. பெரிய தொழிற்கூடம்

4. உரிமம் பெற தொழிற்கூடம்

## 1. உற்பத்தி மாற்றம் (Diversification)

IDR சட்டப்படி உரிமம் பெற்ற நிறுவனங்களே உரிமத்திற்குரிய பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும்.

MRTP அல்லாத கம்பெனிகள் உற்பத்தி செய்யும் தொழிலை மாற்றிக் கொளளலாம். MRTP மற்றும் FERA கம்பெனிகள் உற்பத்தி தொழிலை மாற்றிக் கொள்ள வசதியாக 1988 ஜூன் மாதம் 30 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

## 2. பெரிய தொழிற்கூடங்கள் (Broadbanding of Industries)

1983 ஜூலை மாதம் முதல் மத்திய அரசு சில குறிப்பிட்ட தொழிற்கூடங்களை தேர்ந்தெடுத்துள்ளது. அதுவே பெரிய தொழிற்கூடமாகும்.

**நோக்கங்கள்**

1. தொழிற்கூட கொள்ளளவு திறன் முழுமையாகப் பயன்படுத்துவது
2. தேவைக்கு தகுந்தபடி உற்பத்தி கலவையை மாற்றுவது.

**சிறப்பியல்புகள்**

1. பெரிய தொழிற்கூடங்களை பல்வேறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.
2. சிறு தொழில்களுக்கு ஒதுக்கப்பட்டவைகளை இதற்கு வழங்கப்படுவதில்லை.
3. MRTP கம்பெனிக்கு சில சலுகைகள் உள்ளன.

## 3. மறுபுறக்குறிப்பு செய்யப்பட்ட உற்பத்தி கொள்ளவு திறன். (Reendorsement of Productive Capacity)

1982ம் வருடம் உற்பத்தி திறன் ஆண்டாக அறிவிக்கப்பட்டன. அராசங்கம் அந்த வருடம் பல திட்டங்களை தொழிற்கூடங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

**சிறப்பியல்கள்**

1. விண்ணப்பம் செய்த 5 வருடங்களில் உரிமம் பெற்ற தொழிற்கூடங்கள் தங்களுக்கு

வழங்கப்பட்ட உரிமம் கொள்ளவு திறனில் 80% நிறைவேற்றியுள்ளதோ அந்த நிறுவனங்களுக்கு அரசு சில சலுகைகள் வழங்கப்படும்.

2 உரிமக் கொள்ளவில் உண்மையான உற்பத்தியில் 25% நிறைவேற்றினாலும் மறு புறக்குறிப்பு அனுமதிக்கப்படும்.

அடையாளம் கண்டு கொண்ட 21 தொழிற்கூடங்களுக்கு இந்த திட்டம் பொருந்துவதில்லை.

நகரபுறத்தில் அமைந்த தொழிற்கூடம் என்றால் மக்கள் தொகை 10 லட்சத்திற்கு அதிகமாகவும், நகராட்சி எல்லைக்குள் உள்ள தொழிற்கூடம் என்றால் மக்கள் தொகை 5 லட்சத்திற்கு அதிகமாகயிருந்தால் இந்த திட்டம் பொருந்தாது.

5. MRTP, FERA கம்பெனிகளுக்கு இந்த திட்டம் பொருந்தாது.

6. மருந்து தயாரிக்கும் கம்பெனிக்கு சில விதி முறைகளும், நிபந்தனைகளும் உள்ளன.

## 5. உரிமம் தேவையில்லாத கம்பெனிகள் (De-Licensing of Industries)

அட்டவணையில் உள்ள தொழிற்கூடங்கள், உற்பத்தியில் ஈடுபடும் தொழிற்சாலைகளுக்கு உரிமம் பெற வேண்டும்.

அட்டவணையில் உள்ள தொழிற் கூடங்களுக்கு சில சலுகைகள் விதிகள் தளர்த்தப்படுகின்றன.

### கம்பெனி புலனாய்வு (Investigation into the affairs of the undertakings)

பட்டியலில் உள்ள தொழிற்கூடங்களின் செயல்பாடு ஒன்றாக உள்ளதா அவை எவ்வாறு சமுதாயத்திற்கும் பொதுமக்களின் பொதுக் கொள்கைக்கும் ஊறுவிளைவிக்கின்றதா என ஆராய கம்பெனியை முழுமையாக புலனாய்வு செய்ய மத்திய அரசு விரும்பலாம். அதற்கான அதிகாரிகளை நியமித்து அவர்களின் புலானய்வு அறிக்கையின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது .

### புலனாய்வுக்கான காரணங்கள்

உற்பத்தி செய்த பொருளின் தரம் குறைவாக இருப்பது, உற்பத்தியின் அளவு குறைவாக இருப்பது, விலை ஏற்றம், தேசீய வளத்தை முறையாக பயன்படுத்தாமை.

### புலனாய்வளங்களின் அதிகாரங்கள் (Powers of the Investigation)

பிரிவு 15A யின்படி கம்பெனி கலைக்கப்படும் பொழுது அதன்மீது புலனாய்வு செய்ய நிதிமன்றத்தில் மத்திய அரசு விண்ணப்பிக்கலாம். கம்பெனி கலைக்கப்படுவதற்கு முன்பு மத்திய அரசு புலனாய்வு செய்ய விரும்பினால் நீதிமன்றத்திடம் அனுமதி பெற தேவையில்லை.

### புலனாய்வு செயல்முறைகள்

1. புலனாய்வு உட்படுத்தப்பட்ட கம்பெனியின் பொருட்களை ஒழுங்குமுறை படுத்துவது
2. உற்பத்தி செய்யக்கூடிய பொருளின் தரத்தை நிர்ணயம் செய்வது.
3. உற்பத்தி திறன் கொள்ளவை குறைப்பதை தடுப்பது.
4. உற்பத்தி செய்த பொருளின் விலையை கட்டுப்படுத்துவது.
5. கம்பெனியின் நிர்வாகத்தை எடுத்துக் கொள்வது.
6. பொதுமக்களின் நலனுக்கு எதிராக செயல்படும் கம்பெனியின் உரிமத்தை ரத்து செய்வது.

4. கட்டுப்படுத்தும் முறைகள் (Curative Measures)

IDR சட்டப்படி தொழிற் கூடங்களின் செயல்பாடுகளை வரைமுறைக்கு கொண்டுவர இரண்டு விதமான தடுப்பு முறைகளை கையாளுகிறது.

1. கம்பெனி நிர்வாகத்தை எடுத்துக்கொள்வது.
2. விலை, அளிப்பு ஆகியவற்றை கட்டுப்படுத்துவது.

1. அரசாங்கத்தின் நேரடி மேலாண்மை (Direct Management by Government) பிரிவு 18 IDR சட்டப்படி

1. அரசு விதித்த சட்டங்கள் விதிகளை பின்பற்றாத கம்பெனியின் நிர்வாகத்தை எடுத்துக்கொள்வது.
2. பொதுமக்களின் நலனுக்கு எதிராக செயல்பட்டு வரும் நிர்வாகத்தை எடுத்துக் கொள்வது.
3. புலனாய்வு செய்யாமலேயே நிர்வாகத்தில் அரசு தலையிடுவது
4. நிர்வாகத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ எடுத்துக் கொள்வது.
5. கலைக்கப்படும் கம்பெனிக்கு இந்த பிரிவு பொருந்தாது.

**அரசு புலனாய்வு மேற்கொண்ட கம்பெனிகளை எடுப்பதால் காணப்படும் விளைவுகள் (Consequences of takeover by the Government)**

பிரிவு 18B முதல் 18E வரை இதை பற்றி கூறப்பட்டுள்ளது.

1. கம்பெனி நிர்வாக அதிகாரிகள், மேலாளர், இயக்குநர்கள் தங்களுடைய பதவிகளை விட்டுவிட வேண்டும்.
2. ஒப்பந்தங்கள் ஏதேனும் மேற்கொண்டால் அதனை ரத்து செய்வது.
3. கம்பெனிச் சொத்துக்கள், ஆவணங்கள் கணக்கு ஏடுகளை தன்வசம் அரசு வைத்துக் கொள்வது.
4. அரசு வழிகாட்டிய நெறிமுறைகள் பின்பற்றி புதிய இயக்குநர் அவை கம்பெனியை நடத்தி செல்ல வேண்டும்.
5. பங்குதாரர்களின் உரிமைகளை முடிவுக்கு கொண்டு வரப்படும. நிறைவேற்றிய தீர்மானங்கள் செயல்படாமல் செய்வது.
6. கலைப்பு கோரிய கம்பெனியை நிறுத்தி வைப்பது.

**எடுக்கப்பட்ட கம்பெனியை ரத்து செய்யும் ஆணை**

புலனாய்வு செய்யப்பட்ட கம்பெனியை எடுத்து கொண்ட அரசாங்கம் எந்த நேரத்திலும் அந்த ஆணையை ரத்து செய்ய உரிமையுள்ளது.

2. விநியோகம் மற்றும் விலையை கட்டுப்படுத்துதல் (Control over price and Distribution)

அட்டவணையில் உள்ள தொழிற்கூடங்கள் உறபத்தி செய்யும் பொருட்களை நியாயமான முறையில் விற்கவும், முறையாக விநியோகம் செய்ய அரசு சில விதிமுறைகளை வகுத்துள்ளது.

1. வாங்கவோ அல்லது விற்ககூடிய பொருட்களின் விலையை கட்டுப்படுத்துவது.
2. முறையாக உரிமம், அனுமதி வழங்குவது.
3. அரசு விதித்த விதிமுறைப்படி சரக்குகளை இருப்பதாக வைத்திருப்பது.
4. புள்ளியியலில் தகவல்களை சேகரிப்பது.

**மத்திய ஆலோசகக் குழு (Central Advisory Council)**

IDR சட்டத்தின்படி பிரிவு 5ன் படி மத்திய அரசு மத்திய ஆலோகக் குழு ஒனறை ஏற்படுத்தியுள்ளது. இதில் அதிகபட்சமாக 30 உறுப்பினர்கள் உள்ளனர். அனைத்து உறுப்பினர்களையும் (தலைவர் உட்பட) மத்திய அரசு நியமனம் செய்கின்றது. அட்டவனையில் உள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கக்கூடிய உரிமம், அனுமதி, போன்றவற்றை ஒழுங்குபடுத்தி நெறிபடுத்துவதே இந்த குழுவின் நோக்கமாகும்.

மத்திய அமைச்சகத்தின் தொழில் அமைச்சரே இந்த குழுவின் தலைவராக இருப்பார். கீழ்க்கண்டவைகளிலிருந்து அரசு உறுப்பினர்களை நியமிக்கின்றது.

1. தொழிற்கூட பணியாளர்கள்
2. தொழிற்கூட உரிமையாளர்கள்
3. நுகர்வோர் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம்.

உறுப்பினர்கள் மீண்டும் நியமனம் செய்ய அரசுக்கு உரிமையுண்டு.

**வளர்ச்சிக்கான குழு (Development Council)**

அட்டவணையில் உள்ள தொழிற்சாலையின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு வளர்ச்சிக்குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

**உறுப்பினர்கள்**

நுகர்வோர் சார்பான பிரதிநிதி, தொழிற்கூட உரிமையாளர்கள் ஆகியோர் இதில் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

**வளர்ச்சிக் குழுவின் பணிகள் (Functions of Development Council)**

இதன் பணியான முதல் ஐந்தாண்டு திட்டத்தின் செயல்களை நிறைவேற்ற பயன்படுகிறது. IDR சட்டத்தின் இரண்டாவது பட்டியலில் இதன் பணிகளை விரிவாக கூறப்பட்டுள்ளது.

**பணிகள்**

1. நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி இலக்கை அடைய பரிந்துரை செய்வது.
2. பேரளவு உற்பத்தியும், தரமான பொருள் உற்பத்தி செய்வது.
3. தொழிற்கூடத்தின் கொள்ளவு திறனை முழுமையாக பயன்படுத்துவது.
4. சந்தையிடுகை வசதியை மேம்படுத்தி தருவது.
5. தரமான பொருளை உற்பத்தி செய்வது.
6. தட்டுப்பாடான கச்சாப்பொருளை விநியோகம் செய்வது.
7. ஆராய்ச்சி பணிகளை மேற்பார்வையிடுவது.
8. பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பது.
9. பணிநீக்கம் செய்யப்பட்டால் அவருக்கு பதிலாக புதிய நபரை நியமிப்பது.
10. புள்ளியியல் தகவல்களை சேகரிப்பது.
11. தொழிற்சாலை சம்பந்தமான தொழிற்கொள்கைக்கு ஆலோசனை வழங்குவது.
12. கணக்கியல், அடக்கவிலை கணக்கியலில் புதிய மாறுதல்களை கொண்டுவருவது போன்றவைகள் வளர்ச்சி குழுவின் பணிகளாகும்.

**ஆலோசனைக் குழுவிற்கும், வளர்ச்சி குழுவிற்கும் உள்ள வேறுபாடுகள் (Difference between Advisory Council and Development council)**

1. ஆலோசனைக்குழு என்பது சட்டப்படியான ஒரு குழுவாகும். இது ஒரு குறிப்பிட்ட காலம் வரை செயல்படும். இது ஒரு தற்காலிக குழுவாகும். வளர்ச்சிக்குழுவும் ஒரு சட்டமுறையான குழுவாகும். இது ஒரு நிரந்தர அமைப்பாகும்.

2. IDR சட்டத்தின் நோக்கத்திற்கு ஏற்ப அரசுக்கு ஆலோசனைக்குழு ஆலோசனை வழங்கும். அட்டவணை இரண்டில் கண்டுள்ளபடி வளர்ச்சிக்குழு ஆலோசனை வழங்கும்.

   வளர்ச்சிக்குழு ஒரு கம்பெனி போல் செயல்படும். வருட கடைசியில் தன் வசம் வைத்துள்ள சொத்துக்களையும், கணக்கு ஏடுகளையும் அரசிடம் சமர்பிக்கும்.

**நடைமுறையில் உரிமக் கொள்கை (Licensing Policy in Practice)**

1951ல் தொழிற்சாலைக்கான உரிமக் கொள்கையை அரசாங்கம் IDR சட்டப்படி வகுத்துள்ளது.

இந்தியாவில் உரிமம் கொள்கையை ஐந்து கட்டங்களில் ஆராயப்படுகின்றன.

1. 1960க்கு முன்பு உள்ள உரிமக் கொள்கை
2. 1960 முதல் 1967 வரை உள்ள உரிமைக் கொள்கை
3. 1967 முதல் 1977 வரை உள்ள உரிமைக் கொள்கை
4. 1977 முதல் 1980 வரை உள்ள உரிமக் கொள்கை.
5. 1980க்கு பிறகு வந்த தொழிற்கூட உரிமக் கொள்கை.

**1. 1960க்கு முன்பு இருந்த தொழிற்கூட உரிமம் கொள்கை (Licensing Policy in Practice)**

பாரத பிரதமர் ஜவஹர்லால் நேரு காலத்தில் 1956ல் தொழில் கொள்கைக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

**நோக்கங்கள் (Objectives)**

பொருளாதார வலிமை குவிவதை தடுப்பது, அந்நிய செலவாணிய முறையாக ஒதுக்கீடு செய்வது, தொழிற் வளர்ச்சிக்கு தேவையான தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துவது, வட்டாரத்தில் காணப்படும் சமச்சீரற்ற நிலையை நீக்குவது, சிறுதொழில்களை பாதுகாப்பது.

**குறைபாடுகள்**

உரிமம் வழங்குவதால் காலதாமதம், உரிமம் பெற பல்வேறு சட்ட சடங்குமுறைகளை நிறைவேற்ற வேண்டியதிருப்பதால் தொழில் முனைவோர் ஆர்வம் காட்டுவதில்லை. உரிமம் பெற நடைமுறையில் காணப்படும் விரிவான செயல்கள் அனைத்தும் தொழில்முனைவோரை ஊக்கப்படுத்துவதில்லை.

**2. 1960 முதல் 1970 வரையிலான உரிமக் கொள்கை (Licensing Pollicy Between 1960 to 1970)**

அன்னை இந்திராகாந்தி ஆட்சிகாலத்தில் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் உரிமம் வழங்குவதில் காணப்பட்ட காலதாமதத்தை நீக்கப்பட்டன. உரிமம் பெற ஏற்படும் காலதாமத்தை நீக்க தொழில் அமைச்சகம் மூன்று பட்டியல்கள் 1960ல் தயாரித்துள்ளன அவை.

**1. இலவச பட்டியல் (Free list)**

உரிமக் குழுவிடம் போகாமலேயே உரிமம் வழங்கும்முறை.

2. **தகுதி பட்டியல் (Merit List)**

போதுமான கொள்ளவுதிறன் கொண்ட தொழில் கூடங்கள்

3. **சுவாமிநாதன் குழு (Swaminathan Committee)**

1963ல் செப்டம்பரில் முதல் மூன்று பட்டியல்கள் சரியாக செயல்படாத காரணத்தினால் திரு. சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சுவாமிநாதன் கமிட்டியின் பரிந்துரை பேரில் பின்வரும் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. முக்கிய தொழிற்கூட பட்டியல் (List of Key Industries)
2. முன்னுரிமை பெற்ற பட்டியல் (Priority List)
3. சிறுதொழில்கள் பட்டியல் (Small Scale Industries List)

**சில குறிப்பிட்ட தொழிற்கூடங்களுக்கு உரிமம் (Licence) தேவையில்லை (Delicensing of Certain Industries)**

நாட்டில் தொழிற்கூடங்கள் பெருக்கம் விரைவாக நடைபெற 1966ஆம் ஆண்டு நவம்பர் 26ல் முன்னுரிமை பெற்ற நிறுவனங்களுக்கு உரிமம் பெறாமலேயே தொழில் துவக்க அரசு அனுமதியளித்தது.

**ஹாசாரி கமிட்டியின் ஆய்வுகள் (Hazari Committee and its findings)**

1966ல் மத்திய அரசு பேரா. ஹசாரி (Hazari) என்பவரை உரிமம் வழங்குவதற்கான முறையை ஆராய நியமித்துள்ளது. பேரா ஹசாரி தொழிற் கூட்டங்களுக்கு வழங்கும் உரிமம் முறையில் காணப்படும் குறைபாடுகளை பின்வருமாறு சுட்டி காட்டியுள்ளார். அவை

1. **பன்மடங்கு உரிமம் வழங்குதல் (Multiple Licences)**

ஒரே பொருளுக்கு அரசு பலவிதமான உரிமம் வழங்குவதால் அந்த உரிமம் பெற்றவர்கள் முற்றுரிமை பெற்றவர்களாக விளங்குகின்றனர். இதை நீக்க வேண்டும்.

2. **வரிசைப்படி தேர்ந்தெடுத்தல் (Chronological Selection)**

முதலில் வந்த விண்ணப்பங்களுக்கு முதலில் உரிமம் வழங்கும் முறை கடைபிடிக்கப்படுகிறது. எனவே சில பெரிய நிறுவனங்கள் ஆரம்ப கட்டத்திலேயே அதிக விண்ணப்பங்களை நிரப்பி அனுப்பி விடுவதால் அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது.

3. **பின் தொடரல் இல்லாதது (Absence of Follow of Actions)**

உரிமம் பெற்ற நிறுவனங்கள் முறையாக ஒழுங்காக செயல்படுகிறதா என கவனிக்க அரசு தவறிவிடுகிறது. எனவே முறையான பின்தொடரல் இல்லாததால் நிறுவனங்கள் பொதுமக்களின் நலனுக்கு எதிராக செயல்படுகிறது என ஆராய்ந்துள்ளார்.

**பேரா. ஹசாரியின் பரிந்துரைகள் (Recommendations of Prof. Hazari)**

1. **திட்ட கமிஷன் இலக்கை அடைய முன்னுரிமை பெற்ற நிறுவனங்களுக்கு வரி ஒதுக்கீடு, கடன் தொகை அந்நிய செலவானி ஒதுக்கீடு செய்வது.**
2. **ஒரே நிறுவனத்திற்கு அளவுக்கு அதிகமாக உரிமம் வழங்குவதை தடுப்பது, வளங்களை சமமாக வட்டார அளவில் ஒதுக்கீடு செய்வதால் பொருளாதார வலிமை ஒரே இடத்தில் குவிவதை தடுக்கலாம்.**